சத்தியம் வந்தது...
அசத்தியம் அழிந்தது...

SATHIYA PATHAI - TAMIL MONTHLY

KEELAi NEWS


# சத்திய பாதை

தமிழ் மாத இதழ்

உங்கள் சிந்தனைக்கு வழிகாட்டும்

சத்தியம்: 17 பாதை: 2 பிப்ரவரி - 2025 விலை: 15 ஆண்டு சந்தா: 100/-





## திருப்பரங்குன்றம் விவகாரம்: அரசின் மௌனம் ஏன்?



## திராவிடமாடலின் மகத்தான வெற்றி!



## பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பு



## விஜயுடன் ராகுல் பேச்சு?

www.keelainews.in

# இராமநாதபுரம் மாவட்டத்திற்கு விமான நிலையம் வருமா?

## மக்களின் எதிர்பார்ப்பும் அரசின் நிலைபாடும்..









# அசுத்தமாக காட்சியளிக்கும் அழகிய அரியமான் கடற்கரை!


keeggi
delivers...
KEEGGI
கீழக்கரை மக்களின் நன்மதிப்பை பெற்ற ஒரே செயலி...
Chicken Mandhi
Hot & Tasty
order
Dhai Puri
Enjoy Your Delicious Dessert
order
Pharmacy
Parotta
Night dinner with parrotta
order
Holidays & Picnic
AVAILABLE ON
GET IT ON
Google Play
Available on the
App Store
Scan to Download
FOR MORE DETAILS:-
91508 02534
044 4813 7003
admin@keeggi.com

## ஆசிரியர் குரல்

# விருது... விழா... விளம்பரம்..

விருதுகள் விற்பனைக்கு அல்ல.. என தரமான.. விருதுகளை விருதுகளாக வழங்கும் தரமிக்க நிறுவனங்கள் விளம்பர பதாகைகள் வைக்கும் நிலமைக்கு தள்ளப்பட்டு வருகிறது. காரணம் சமீப காலமாக யார், எதற்கு, என்ன சேவைக்காக, எந்த பணிக்காக விருது வழங்குகிறார்கள் என்ற அடிப்படையே இல்லாமல் பெருகி வருகிறது. சில வருடங்கள் முன்பு ஒரு நிகழ்வில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு அடையாளமாக வழங்கப்படும் நினைவு பரிசுகளே இன்று விருதுகளாக விற்கப்படுகிறது.

ஒரு காலங்களில் சமுதாயத்திற்கும், சமுதாய மாற்றத்திற்காகவும் பாடுபட்ட தொண்டு நிறுவறங்கள், அரசு அமைப்புகள் சம காலங்களில் பொதுமக்களிடையே மாற்றத்தை உண்டாக்க நினைக்கும் அறிவு சார்ந்த மக்களை அடையாளம் கண்டு அவர்கள் செய்யும் பணிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக விருதுகளும், பரிசுகளும் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள்.

ஆனால்.. இன்றைய நவீன உலகில் நிலமையே வேறு. டாக்டர் பட்டம் முதல் சமூக சேவகத்திற்கான விருது வரை விற்பனைக்கு வந்து விட்டது என்றே கூறலாம். வியாபாரம் மூலம் லாபம் ஈட்டும் நிறுவனங்கள் சிலரின் பேராசைகளை நிறைவேற்றவும், தங்கள் நிறுவனத்திற்கும் பொது நலனில் அக்கறை உள்ளது என்ற பிம்பத்தை உருவாக்கவும் இந்த விருது வழங்கும் விழாக்கள் பெருகி வருகிறது. எப்படி ஒரு காலத்தில் சாதனைக்கு கின்னஸ் விருது சான்றாக தொடங்கி இன்று பல்லாயிரம் தனியார் சாதனை விருது நிறுவனங்கள் புற்றீசல் போல் பெருகிவிட்டதோ.. அதே போல் காரிய.. காரணமின்றி விருது கொடுக்கும் கலாச்சாரமும் பெருகி வருவது மிகவும் வேதனையான, ஆபத்தான விசயம் என்பதை விட இதை ஒரு காசாக்கும் தொழிலாகவே பல நிறுவனங்கள் செய்து வருகின்றனர். இவர்களிடம் ஒரு கேள்வி, எந்த அடிப்படையில் இந்த விருது?? இதற்கான செயல்திட்டங்களும், வழிமுறைகளும் என்ன, என கேட்டால் இவர்களின் பித்தலாட்டம் வெளி வரும். கேள்வி கேட்கும் சமுதாயமே சிறந்த சமுதாயம், ஆனால் விருது என்ற வார்த்தை கேள்வி கேட்கும் மனநிலையையே மழுங்க செய்து விடுகிறது என்பதுதான் யதார்த்தம். இதற்காக கமிஷன் அடிப்படையில் பணிபுரியும் முகவர்களும் உண்டு. இவர்கள் விளம்பரத்திற்காக ஏங்கி திரியும் நபர்களை அடையாளம் கண்டு ஆசை வார்த்தைகளை கூறி, தங்கள் நிறுவனம் மூலம் வழங்கும் விருதால் வாழ்வின் நிலையே மாறிவிடும் என மாற்றி பல ஆயிரங்கள் சம்பாதித்து வருகின்றனர்.

ஆனால் இதையும் தாண்டி மிகவும் வேதனையான விசயம், தான் ஏமாற்றப்பட்டுள்ளோம் அல்லது பெறப்பட்ட விருதால் எந்த பலனும் இல்லை.. விருது வழங்கிய தனியார் நிறுவனமே விளம்பரத்தால் பல லட்சங்கள் சம்பாதித்து உள்ளன என்பதை அறிய, சமூக வலைதளங்களில் யாருக்கும் கிடைக்காத விருது தமக்கு கிடைத்தது போன்ற விளம்பரமும்.. அதற்கு வாழ்த்து கூறுபவர்களையும் பார்த்தால் சிரிப்பதா.. வேதனைப்படுவதா என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் பாதிக்கப்படுபவர்கள் உண்மையாகவே உரத்த சிந்தனை உள்ளவர்களும், சமூகத்தில் மாற்றம் கொண்டு வந்தவர்களும், கொண்டு வர நினைப்பவர்கள், சாதித்தவர்கள் போன்றவர்கள் வெளிச்சத்துக்கு வர முடியாமல் செய்தவை அனைத்தும் அவர்களுடனே செத்து மடிந்து விடுகின்றன. அரசு இது போன்ற போலிகளை அடையாளம் கண்டு இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும்.

– ஆசிரியர்



**நாட்டின் 202425ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலாசீதாராமன் நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் வளர்ச்சிக்கான அறிவிப்புகள், இந்த பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளதா? என்றால் அதற்கான விடை கேள்விக்குறியே. இந்த பட்ஜெட்டில் மாநிலங்களின் கோரிக்கைகளை ஒன்றிய அரசு, ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. கடந்த நிதியாண்டில் (202324) மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு ரூ. 86ஆயிரம் கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கோடிக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பும், ஊதியமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் நடப்பாண்டு பட்ஜெட்டில், இந்த திட்டத்திற்கு கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்களும் கோரிக்கை வைத்தன. ஆனால், பட்ஜெட்டில் இது குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை. இதேபோல் பட்ஜெட் நிதி ஒதுக்கீடு குறித்த மாநிலங்களின் பல்வேறு கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்பதற்கும் இந்த பட்ஜெட் ஒரு ஆதாரமாக நிற்கிறது. ஜிஎஸ்டியில் மாநிலங்களுக்கு உரிய நிதிப்பகிர்வை ஒன்றிய அரசு முறையாக அளிக்கவில்லை.

இதனால் 1.5லட்சம் கோடி வட்டி இல்லா கடனாக வழங்கப்படும் என்ற அறிவிப்பு எந்த வகையிலும் மாநிலங்களுக்கு பயன்தராது என்ற குமுறலும் ஒலிக்கிறது. இது ஒருபுறமிருக்க, தான் ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் மீது பாரபட்சமும், ஆட்சிக்கு வரவே முடியாது என்று கருதும் மாநிலங்களுக்கு ஓரவஞ்சனையும் காட்டுவது ஒன்றிய அரசின் வாடிக்கையாக நீடித்து வருகிறது. இந்த வகையில், நடப்பாண்டு பட்ஜெட்டிலும் பல மாநிலங்களுக்கு பாரபட்சமும்,

# மீண்டும் மீண்டும் புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு...

## புதைகுழிக்குள் கூட்டாட்சித் தத்துவம்!

தென் மாநிலங்களுக்கு ஓரவஞ்சனையும் செய்துள்ளது ஒன்றிய அரசு. பட்ஜெட்டில் எந்த இடத்திலும் தென்மாநிலங்கள் குறித்த பெயர் இடம் பெறவில்லை என்பதே இதற்கான சான்றாக மாறி நிற்கிறது.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டின் மீதான ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை மீண்டும் அம்பலத்துக்கு வந்துள்ளது என்கின்றனர் நடுநிலையாளர்கள். தற்போதைய நிலவரப்படி, இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பங்கு வகிக்கும் மாநிலமாக திகழ்கிறது தமிழ்நாடு. இதுமட்டுமன்றி பொருளாதார ஆய்வறிக்கை, உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசை அறிக்கை, நிதிஅயோக் அறிக்கை என்று ஒன்றிய அரசின் அனைத்து அறிக்கைகளிலும் முதன்மையான இடத்தை பிடித்து நிற்கிறது தமிழகம். ‘‘பக்கத்துக்கு பக்கம் தமிழகத்தின் செயல்பாடுகளுக்கு ஒன்றிய அரசு




பாராட்டு பத்திரம் வாசிக்கிறது.

ஆனால், நிதிநிலை அறிக்கையில் மட்டும், நடப்பாண்டும் தமிழகம் முழுமையாக புறக்கணிப்பட்டுள்ளது என்பது முதல்வரின் அறிக்கை வெளிப்படுத்தும் வேதனை. ‘‘ஏற்காத கொள்கைகளையும், மொழியையும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தின் சிறுதுளியையாவது நிதி ஒதுக்கீட்டில் காட்டவேண்டாமா?’ என்று அவர் எழுப்பியுள்ள கேள்வி ஓரவஞ்சனைக்கு கொடுத்துள்ள நெற்றியடி. அதேநேரத்தில், பட்ஜெட் அறிக்கை என்பது அரசியல் லாபத்தை நோக்கமாக கொண்டது என்ற சர்ச்சையும் எழுந்துள்ளது. பீகாரில் விரைவில் நடக்கும் தேர்தலை கருத்தில் கொண்டு, அந்த மாநிலத்திற்கு சிறப்பு திட்டங்களை அறிவித்திருப்பது இதனை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. வருமான உச்சவரம்பு ரூ. 12லட்சமாக உயர்வு என்பது மட்டுமே அனைவருக்குமான ஒரே ஆறுதல். மற்றபடி ஓரவஞ்சனை, மாயாஜால அறிக்கை, அதிருப்தியின் உச்சம், பெருத்த

1 நூறுநாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் கூலியை உயர்த்தி இருந்தால் பல கோடி தொழிலாளர்கள் பயனடைந்து இருப்பார்கள். குறைந்த பட்ச ஊதியத்தை சட்டப்பூர்வமாக உயர்த்தி இருந்தால் பல கோடி பேருக்கு சலுகை கிடைத்து இருக்கும். வருமான வரி கட்டுபவர்கள் மட்டுமே வரி கட்டவில்லை. ஏழைகள் உள்பட அனைத்து தரப்பினரும் ஜி.எஸ்.டி மூலம் வரி கட்டுகிறார்கள். ஜிஎஸ்டியை குறைத்து இருந்தால் அனைவருக்கும் பயன் உள்ளதாக அமைந்து இருக்கும். பெட்ரோல், டீசல் வரிச்சுமை அல்லது விலையை குறைத்து இருந்தால் அடித்தட்டு ஏழைகளும் பயன் அடைந்து இருப்பார்கள். அத்தியாவசிய பொருட்களின் விலைவாசியும் குறைந்து இருக்கும்.

2 இன்ஷூரன்ஸ் துறையில் நூறு சதவீதம் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டு, முழுவதுமாக வெளிநாட்டு முதலாளிகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளது. சமூக பாதுகாப்புடன் கூடிய வேலை வாய்ப்பை உருவாக்க எந்த முயற்சியும் இல்லை. பஞ்சாப்அரியானா எல்லையான தலேவாலில் நவம்பர் 26ம் தேதியிலிருந்து தொடர்ந்து போராடிவரும் விவசாயிகளின் முக்கிய கோரிக்கையான “விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை” நிர்ணயிக்கப்படவில்லை. உரங்களின் விலைகளை குறைக்கவில்லை. பயிர் காப்பீடு திட்டத்தின் உயர்வு குறித்து அறிவிப்பு கிடையாது. விவசாயிகள் வருமானத்தை உயர்த்த வழியில்லை.

3 கிசான் கிரெடிட் கார்டு மூலம் ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கப்படும் என்ற அறிவிப்பு விவசாயிகளுக்கான கடன் சுமையை மேலும் அதிகரிக்கும் தவிர முன்னேற்றம் இருக்காது. இந்தியாவில் கேன்சர் நோய் அதிகரிப்பதால் நாட்டில் உள்ள சுமார் 680 மாவட்டங்களில் கேன்சர் மையங்கள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான காலக்கெடு கூறப்படவில்லை. மேலும் அதிகரிக்கும் கேன்சர் நோயை தடுக்க ஒன்றிய அரசிடம் எந்த திட்டமும் கிடையாது. உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும் உரிய அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. சிறு, குறு தொழில் நிறுவனங்களை பாதுகாக்கவும் வளர்ச்சி அடையும் வகையில் புதிய திட்டங்கள் இல்லை.

4 நாட்டின் நிதி நிலைமை மிக மோசமாக இருப்பதையே நிதி நிலை அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. மத்திய அரசின் செலவுகளில் மிகப்பெரிய செலவாக இருப்பது வாங்கிய கடனுக்கு செலுத்தும் வட்டிதான். இந்த ஆண்டு, வட்டியாக மட்டும் 12,76,338 கோடி ரூபாய் செலுத்தப்படும். பாஜவின் 11 ஆண்டு ஆட்சியில் தொலைநோக்கு திட்டங்கள் இல்லாததால் உலகளவில் பொருளாதாரத்தில் இந்தியா, பெரியளவில் முன்னேற்றம் காணவில்லை. உள்கட்டமைப்புடன் இந்தியா, வளர்ச்சி அடையாததே காரணமாக கூறப்படுகிறது. புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் ஏழை எளிய மக்கள் முன்னேற்றத்துக்கான வழிவகை இல்லாத பட்ஜெட்டாக உள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் மற்றும் அறிஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## அரசியல் தலைவர்களின் வரவேற்பும், விமர்சனமும்!







**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாடு ஏற்காத கொள்கைகளையும், மொழியையும் திணிப்பதில் காட்டும் ஆர்வத்தில் சிறு துளியையாவது நிதி ஒதுக்கீட்டில் காட்ட வேண்டாமா?. விளம்பரம் ஒன்றையே பாராட்டும் ஒன்றிய அரசு, மக்கள் நலனில் எந்தவொரு அக்கறையையும் காட்ட மறுக்கிறது. வெற்றுச் சொல் அலங்காரங்களும், வஞ்சனையான மேல் பூச்சுகளும் கொண்ட அறிக்கையின் மூலமாக நாட்டு மக்களை வழக்கம் போல் ஏமாற்றும் பாஜகவின் பம்மாத்து நாடகம் தொடர்கிறது.

எந்த மாநிலத்தில் தேர்தல் நடைபெறவுள்ளதோ, எங்கு பாஜக கூட்டணி ஆட்சியில் உள்ளதோ அந்த மாநிலத்துக்கு மட்டும்தான் திட்டங்களும் நிதியும் அறிவிக்கப்படும் என்றால் 'ஒன்றிய' நிதிநிலை அறிக்கை என இதனை அழைக்க வேண்டிய அவசியம் என்ன?.

**எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி:** பீகார் மாநிலத்திற்கு விரைவில் தேர்தல் வருவதை கருத்தில் கொண்டு அம்மாநிலத்திற்கு மட்டும் பல வளர்ச்சி திட்டங்களை அறிவித்துள்ளதால், மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை என கூறுவதை விட, பீகார் மாநில வரவு ரு செலவு நிதிநிலை அறிக்கை என கருதும்படி அமைந்துள்ளது. இது ஒரு மாயாஜால அறிக்கையாக, வார்த்தை ஜாலங்கள் நிறைந்த அறிக்கையாக தோன்றுகிறது.

**புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் நாராயணசாமி:** மகாலட்சுமியின் ஆசிர்வாதத்தை பட்ஜெட் பெற்றிருக்கும் என பிரதமர் கூறியிருந்தார்; ஆனால் மகாலட்சுமியின் ஆசிர்வாதம் 1% மட்டுமே; 99% ஆசிர்வாதமில்லை.

**பாமக நிறுவனர் ராமதாஸ்:** வேளாண் உற்பத்திப் பொருட்கள் அனைத்துக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை உறுதி செய்யப்பட வேண்டும் என்பது தான் உழவர்களின் கோரிக்கை ஆகும். இதை வலியுறுத்தி உழவர்கள் போராடி வரும் நிலையில், அதுகுறித்த அறிவிப்புகள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறாதது ஏமாற்றம் அளிக்கிறது.

**பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்:** வருமானவரி வரம்பு ரூ.12 லட்சமாக உயர்த்தப் பட்டதில் மகிழ்ச்சி: தமிழ்நாட்டிற் கான சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்படாதது ஏமாற்றம்!

**அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்:** ஏழை, எளிய மக்களுக்கு நம்பிக்கை தரும் பட்ஜெட்: தனிநபர் வருமான வரி உச்சவரம்பு 12 லட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது நடுத்தர மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருக்கிறது. மத்திய பட்ஜெட்டை ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது குடிமக்கள் அனைவருக்கும் நம்பிக்கையூட்டும் வகையிலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கிறது.

**தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்:** இந்தியாவுக்கு முக்கியமான ஒரு திட்டமாக இருப்பது நதிகள் இணைப்பு திட்டம், புல்லட் ரயில் திட்டம், GST வரியை குறைத்து அறிவிக்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது. அதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் அதிகப்படியாக வேலை வாய்ப்புகளுக்கான எந்த ஒரு அறிவிப்பு திட்டம் இல்லை, மேலும் விலைவாசி உயர்வு குறைப்பதைப் பற்றிய அறிவிப்பும் இல்லை, இந்தியா முழுவதும் சுங்கச்சாவடி (TOLLGATE) ரத்து அறிவிப்பு இல்லாதது, இந்தியாவின் பழமை வாய்ந்த தமிழ் மொழியை இன்னும் ஊக்கப்படுத்துவதற்கு தனியாக பட்ஜெட் ஒதுக்கவில்லை, மாநிலங்களுக்கு உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு ரூபாய் 1.50 லட்சம் கோடி வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்று சொல்லி இருப்பது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், தமிழகத்தில் உள்கட்டமைப்பு நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இந்த பட்ஜெட் "யானைப் பசிக்கு சோளப்பொறி" என்ற பழமொழிக்கு ஏற்ப அமைந்துள்ளது.

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ:** மத்திய நிதி நிலை அறிக்கை ஒட்டு மொத்தமாக ஏமாற்றத்தையே தருகிறது; உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் உரிய அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கிறது; வேலைவாய்ப்புகளை அதிகரிக்க உறுதியான செயல்திட்டங்கள் இல்லை.

ஏமாற்றம் என்று அரசியல் கட்சித்தலைவர்கள் குறிப்பிட்டுள்ள அனைத்து சொற்களும் இந்த பட்ஜெட்டுக்கு பொருந்தும் என்பதே நிதர்சனம்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 2025–26 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட், ஆண்டுக்கு ரூ.12 லட்சம் வரை வருமானம் பெறுபவர்களுக்கு வரிவிலக்கு,நலத்திட்டங்கள் என பேசுபொருளாகியிருக்கும் அறிவிப்புகளைக் கொண்டிருக்கும் அதேநேரம், வழக்கம்போல தமிழ்நாட்டை வஞ்சித்திருக்கிறது என்பது வேதனையே!

விரைவில் சட்டமன்றத் தேர்தல் நடக்கவிருக்கும் பீகார் மாநிலத்துக்கு ஏகத்துக்கும் நிதி ஒதுக்கி, பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களைத் தட்டிக்கொடுத்துள்ள மத்திய பா.ஜ.க அரசு, தமிழ்நாடு, கேரளா என தென்னிந்திய மாநிலங்களை புறக்கணித்துள்ளது.

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்... சென்னை, மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்கள், தாம்பரம் செங்கல்பட்டு உயர்மட்ட விரைவுச் சாலை, பேரிடர் நிவாரண நிதி, மதுரை எய்ம்ஸ், ஜி.எஸ்.டி வரியில் உரிய நிதிப் பகிர்வு என தமிழகத்தின் எதிர்பார்ப்புகளைப் பட்டியலிட்டிருந்தார். ஆனால், ஒன்றைகூட ஏறெடுத்துகூட

பார்க்கவில்லை மத்திய பா.ஜ.க அரசு.

`வளர்ச்சித் திட்டங்களில் எல்லாம் தமிழ்நாடு பாராட்டும் அளவுக்குப் பரிமளித்தும், மத்திய பட்ஜெட்டில் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது ஏன்?' என முதல்வர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

மக்கள்தொகைக் கட்டுப்பாடு, வரி செலுத்துவது, கல்வி முன்னேற்றம், தொழில் பெருக்கம் என அனைத்துக் கூறுகளிலும் நாட்டின் நலனுக்கும், வளத்துக்கும் முதல் வரிசை மாணவராக எப்போதும் பங்களிக்கிறது தமிழ்நாடு. இருந்தும், அப்படியென்ன பாராமுகம் மத்திய பா.ஜ.க அரசுக்கு?

‘அரசியல் ரீதியாக பா.ஜ.கவால் காலூன்ற இயலாமல் இருக்கும் மாநிலம், தமிழ்நாடு. தனக்கு எதிரான அரசியல் கட்சி... அரசைப் பழிவாங்குகிறது’ என்று பா.ஜ.க மீது வைக்கப்படும் குற்றச்சாட்டை மெய்ப்பிக்கும் வகையிலேயே இருக்கிறது, மத்திய பா.ஜ.க அரசின் தொடர் செயல்பாடுகள். உண்மையில், பழிவாங்கப்படுவது தமிழக மக்கள்தான்.



இதற்கு, பெரும்புதூர் வேலூர் இடையே பத்தாண்டுகளுக்கும் மேலாக சீரமைக்கப்படாமல் கிடக்கும் தேசிய நெடுஞ்சாலை, சின்ன எடுத்துக்காட்டு!

‘தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்றால், அது தி.மு.க அரசுக்குப் பாராட்டாக அமைந்துவிடும் என கணக்குப் போட்டு, வாய்ப்புள்ள விஷயங்களில் எல்லாம் பாரபட்சமாக நடத்தி, அதனால் ஏற்படும் பின்னடைவுகளால் தி.மு.க அரசை மக்கள் விமர்சிப்பார்கள்... அதை பா.ஜ.கவுக்கான ஓட்டாக அறுவடை செய்யலாம்’ என்று பா.ஜ.க நினைக்கிறதோ என்றுமே சொல்லத் தோன்றுகிறது.

மத்திய அரசு என்பது அதிகாரக் குவிப்புக்கானதோ, காழ்ப்பு உணர்ச்சி காட்டுவதற்கானதோ, பழி வாங்கலுக்கானதோ அல்ல. அது, கூட்டாட்சித் தத்துவத்தின் குவியம். இந்த அடிப்படையை பா.ஜ.க புரிந்துகொள்ள வேண்டும். இல்லையெனில், அதன் கணக்கு மொத்தத்தையும் தப்புக்கணக்காகவேதான் மாற்றுவார்கள் மக்கள்.

‘வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி’

என்று பட்ஜெட்டில் திருக்குறள் படித்த நிதியமைச்சரே... தமிழ்நாடும் இந்திய ஒன்றியத்தில் அசைக்க முடியாத ஒரு தொல்குடியே என்பதை மறந்துவிட வேண்டாம்!

**www.keelainews.in**


# சத்திய பாதை

சத்தியம்: 17 பாதை: 2 பிப்ரவரி: 2025 விலை:15

பதிப்பாளர்
**கே.எம்.அப்துல்லா**

ஆசிரியர்:
**செய்யது ஆப்தீன்**

நிர்வாக ஆசிரியர்
**கா.ரஃபிக் அஹமது**

இணை ஆசிரியர்
**J.அஸ்கர் அலி**
**சேகு முகம்மது பாக்கர் அலி**

நிருபர்கள் குழு
**அபுபக்கர் சித்திக்** தென்காசி
**முருகன்** இராமநாதபுரம்
**மோகன்** உசிலம்பட்டி
**சரவண குமார்** திருவண்ணாமலை
**மன்சூர்** தேவகோட்டை
**பாபு** கள்ளக்குறிச்சி
**ஷாநவாஸ்** மேட்டுப்பாளையம்
**சக்தி சரவணன் குமார்** சிவகங்கை
**சுந்தர்** தஞ்சாவூர்
**பஷீர்** திருச்சி
**தண்டபாணி** பரமக்குடி

keelainewsco@gmail.com
+917339039559
+919524127408
+919597550786

Press and Registration of Books Act - ன் படி செய்திகளின் தேர்வுக்கு நிர்வாக ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களின் சொந்த கருத்துக்களே.

உங்கள் சந்தா தொகையை
**KEELAI MEDIA & ADVERTISEMENT PRIVATE LTD**
என்ற பெயரில்
HDFC BANK , Kilakarai Branch,
A/C# 50200026748168,
IFSC CODE: HDFC0004037 செலுத்தலாம்

வடிவமைப்பு: கீழை கிராபிக்ஸ் 8220116303

**தமிழ்நாட்டின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதில் எந்தவித சமரசமும் இல்லாமல் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு. எல்லாருக்கும் எல்லாம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அனை வருக்குமான ஆட்சியைப் பாகுபாடின்றி வழங்கி வரும் திராவிட மாடல் எனும் மக்கள் அரசின் மீது தமிழ்நாட்டு மக்கள் எந்தளவு நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் மதுரையில் மக்கள் பெருந்திரளுடன் நடைபெற்ற பாராட்டுக் கூட்டம் மெய்ப்பித்திருக்கிறது.**



## மக்கள் நலன் காக்கும்

# திராவிட மாடலின் மகத்தான வெற்றி!

தமிழர்களின் பண்பாடும், நாகரிகமும் எவ்வளவு தொன்மை வாய்ந்தது என்பதை அண்மையில் வெளியிடப்பட்ட 'இரும்பின் தொன்மை' என்கின்ற ஆய்வறிக்கையின் மூலம் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழர்கள் இரும்புத் தாதிலிருந்து, இரும்பைப் பிரித்து எடுத்து, கருவிகள் செய்யும் தொழில்நுட்பத்தை அறிந்த உலகின் மூத்த முன்னோடி நாகரிகம் என்பதை ஆய்வுப்பூர்வமாக நிரூபித்திருக்கிறோம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பண்பாட்டைக் கொண்ட தமிழ்நிலத்தில் மதுரை மாநகர் என்பது சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமைக்குரியது. வைகை ஆற்று நாகரிகத்தின் தனிச்சிறப்பு மிக்க அடையாளமாக விளங்கி வருகிறது இன்றைய மதுரை.

அந்த மதுரை மாவட்டத்திலுள்ள அரிட்டாபட்டி எனும் பழம்பெருமை வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க, பல்லுயிர்ச் சூழல் கொண்ட பகுதியில் டங்ஸ்டன் என்கின்ற கனிமத்தை எடுப்பதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டபோது, அதனைத் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை எதிர்த்து நின்றது திராவிட முன்னேற்றக் கழகம். டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கு ஒன்றியபா.ஜ.க. அரசு சட்ட விதிகளைத் திருத்தி ஏலம் விடுவதற்கு முனைப்பு காட்டிய போது, அதற்கும் கண்டனம் தெரிவித்து செயல்பட்டது திராவிட மாடல் அரசு.

டங்ஸ்டன் கனிமம் எடுப்பதற்கு ஏலம் விட்டு, தங்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கக் கூடாது என்று மதுரை அரிட்டாபட்டி மற்றும் சுற்றுவட்டார மக்கள் தங்கள் கிராமசபைக் கூட்டங்களில் கருத்துகளைத் தெரிவித்தபோது, "உங்களுக்கு என்றும் துணையாக இருப்போம்" என்று அவர்களுக்கு உறுதி அளித்தவர் மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சருமான மூர்த்தி அவர்கள்.

மதுரை மக்களின் மனநிலையை உடனுக்குடன் அவர் எனக்குத் தெரிவித்து வந்தார். 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா காட்டிய வழியில் செயல்படுகின்ற திராவிட மாடல் அரசு மதுரையில் டங்ஸ்டன் கனிமத்தை எடுக்க அனுமதிக்க கூடாது என்பதில் உறுதியாக இருந்து, கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தோழமைக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனை நாடாளுமன்ற விவாதங்களில்உறுதியான குரலில் எதிரொலித்தனர். சட்டமன்றத்திலும் இதற்கான தீர்மானத்தை உங்களில் ஒருவனான நான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் முன்னெடுத்து, மக்களின் குரலாக ஒலித்



www.keelainews.in

தேன். ஆளுங்கட்சி உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமின்றி நம் தோழமைக் கட்சியினர், மாற்றுக் கட்சியினர் ஆகியோருடன் எதிர்க்கட்சியினரும் ஒருங்கிணைந்து ஆதரிக்கின்ற அளவில் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தோம்.

மதுரை மக்கள் தங்கள் உணர்வை வெளிப்படுத்தும் வகையில் டங்ஸ்டன் கனிம ஏலத்திற்கு எதிராக நடத்திய மாபெரும் மக்கள் பேரணியை சிறு அசம்பாவிதமும் இன்றி அமைதியான முறையில், அழுத்தமான வகையில், அறவழியில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு திராவிட மாடல் அரசு உறுதுணையாக இருந்தது. இந்தப் பேரணி நடைபெற்றபோது அமைச்சர் மூர்த்தி அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் என்னைத் தொடர்பு கொண்டு மக்களின் உணர்வையும், அவர்களின் கட்டுப்பாட்டையும் விளக்கிக் கொண்டே இருந்தார்.

திராவிட மாடல் அரசின் உறுதியான நிலைப்பாட்டுடன் மக்கள் முன்னெடுத்த போராட்டத்திற்கு கிடைத்த இந்த வெற்றியை அடுத்து, அரிட்டாபட்டி மக்கள் பிரதிநிதிகள் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் மூர்த்தி அவர்களின் வழியாக என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர். தங்களுடைய பாராட்டுகளை நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்புக்கட்டளை விடுத்தனர். இது ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டிற்குக்



**தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அதனை எதிர்த்து வெற்றி காண்பதில் உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது.**

கிடைத்த வெற்றி என்பதால் தமிழ்நாட்டின் முதலமைச்சரான உங்களில் ஒருவனாக நான் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று மறுநாளே குடியரசு நாளான ஜனவரி 26 அன்று சென்னையில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு மதியமே மதுரைக்கு புறப்பட்டேன். அரிட்டாபட்டியில் மக்கள் வெள்ளமெனத் திரண்டு மாபெரும் வரவேற்பு அளித்தனர். பாராட்டுகளைக் குவித்தனர். அவர்களிடம் உரை யாற்றிய நான், இது என்னுடைய அரசின் வெற்றியல்ல. நம்முடைய அரசின் வெற்றி என்பதை உறுதிபடத் தெரிவித்தேன்.

டங்ஸ்டன் உள்ளிட்ட கனிம ஏலங்கள் தொடர்பான ஒன்றிய அரசின் சட்டத்திருத்தங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் தன்னுடைய கருத்தை பா.ஜ.க.வுக்கு ஆதரவாகத் தெரிவித்து இருந்த போதும், சட்டமன்றத்தில் டங்ஸ்டன் ஏலத்திற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அ.தி.மு.க. ஆதரித்ததையும் மற்ற கட்சிகள் ஆதரித்ததையும்மனதாரப் பாராட்டி, இது தமிழ்நாட்டின் வெற்றி என்பதைஅரிட்டாபட்டி மக்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அதனை முழு மனதுடன் வரவேற்று கைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.

அரிட்டாபட்டி போலவே அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களும் தங்கள் நன்றியைத் தெரிவிப்பதற்காக வல்லாளப்பட்டியில் திரண்டு இருந்தனர். அவர்களையும் நேரில் சந்தித்து அவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றதுடன், உங்களுக்கு என்றும் இந்த அரசு துணையாக இருக்கும் என்பதை தெரிவித்து, மக்கள் நலன் காப்பதில் திராவிட மாடல் அரசு எப்போதும் உறுதியாக இருக்கும் என்ற நம்பிக்கையையும் வழங்கினேன். அவர்களின் வாழ்த்து முழக்கங்களும் ஆரவாரமும் இந்த அரசு மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தியது.

கழகத் தொண்டரின் அந்த உணர்ச்சிமிகு சொற்களில் நான் என்னை மறந்தேன். இதுதான் தி.மு.க. என்கின்ற மக்கள் இயக்கம்.எத்தனை ஆண்டுகள் இடைவெளி ஆனாலும் மக்களின் உரிமைக்காக இன்றும் துணை நிற்கின்ற மாபெரும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். மதுரை மக்களுக்காக அதனை அமைச்சர் மூர்த்தி முன்னெடுத்துச் சிறப்பாகச் செயல்படுத்தி, திராவிட மாடல் அரசின் வெற்றிக்கு துணை நின்று இருக்கிறார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் அதனை எதிர்த்து வெற்றி காண்பதில் உங்களில் ஒருவனான என்னுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது. டங்ஸ்டன் கனிமச் சுரங்கத்தை மக்களின் ஆதரவுடன் ரத்து செய்த பெருமையுடன், விழுப்புரம் மாவட்டத்தில் இரண்டு நாட்கள் ஆய்வுப் பணியை மேற்கொள்கிறேன். விழுப்புரம் மாவட்ட மக்களின் கோரிக்கையை மட்டுமின்றி, நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரோடு கலந்த உடன்பிறப்புகளான உங்களையும் சந்தித்து மகிழ்வேன்! ஏழாவது முறையும் தி.மு.க.வே ஆட்சி அமைக்கும் என்பதை உங்கள் மீதான நம்பிக்கையுடன் உரக்கச் சொல்வேன்!

# இராமநாதபுரம் மாவட்டத்திற்கு விமான நிலையம் வருமா?

## மக்களின் எதிர்பார்ப்பும்... அரசின் நிலைபாடும்..

**நமது இராமநாதபுரம் மாவட்டம் வளர்ச்சி பெற உள்நாட்டு விமான நிலையம் மிகவும் அவசியம் என்று தொழில் துறையினர்,சுற்றுலா பயணிகள் ,வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் பொதுமக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தனர், அதனை தொடர்ந்து அப்போதைய இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மணிகண்டன் MBBS (தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர்) ராமேஸ்வரம் கோவில் வந்த அப்போதைய மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சரிடம் இராமநாதபுரத்தில் விமான நிலையம் அமைக்க கோரிக்கை வைத்தார். இராமநாதபுரம் மற்றும் வேலூர் மாநிலத்தில் உதான் எனப்படும் மண்டல விமான இணைப்புத் திட்டத்தின் அடுத்த கட்டச் செயல்பாட்டின் கீழ் வரலாம்.**

முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் 27/10/2017 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் இந்த விவகாரம் உருவானது.

இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் K. நவாஸ்கனி அவர்கள் பாராளுமன்றத்தில் 4/07/2019 அன்று ராமேஸ்வரத்தில் பசுமை விமான நிலையம் அமைக்கப்படுமா என்ற கேள்விக்கு, மத்திய விமான போக்குவத்து துறை அமைச்சர் அவர்கள் ராமேஸ்வரத்தில் அப்படி விமான நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை என்று இராமநாதபுரம் அருகில் Udan 3.0 திட்டத்தின் கீழ் ஸிசிஷி கடந்த ஒரு ஆண்டிற்கு முன்பு UDAN திட்டத்தின் கீழ் ATR 72 ரக விமானங்களை இயக்கும் ஏலத்தில் 3வது சுற்றில், M/s Turbo Aviation Pvt. லிமிடெட் செயல்பாட்டிற்கான முன்மொழிவை சமர்ப்பித்தது. சென்னை மற்றும் ராம்நாடு (ராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள விமான நிலையம்) என்று பதில் அளித்தார். ஆனால் எங்கு என்று அறிவிக்கவில்லை.



பிறகு காரைக்குடி செட்டிநாடு பகுதியில் ஏற்கனவே உள்ள பழைய விமான நிலையத்து வசதிகளை மேம்படுத்தி விமான நிலையம் அமைக்க உத்தரவிட வேண்டும் என்று சிவகங்கையை சேர்ந்த ரமேஷ் குமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் நவம்பர் 2020 ல மனு செய்து இருந்தார்,

இந்த வழக்கு நீதிபதிகள் கிருபாகரன், புகழேந்தி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, காரைக்குடி ஒரு புகழ்பெற்ற தலமாக இருக்கிறது. இதன் அருகில் ராமநாதபுரம் மாவட்டமும் உள்ளது. இந்த மாவட்டத்தில் அமைந்துள்ள ராமேசுவரம், கடைக்கோடி நகரமாகவும், சிவலிங்க ஸ்தலமாகவும் உள்ளது. எனவே ராமேசுவரம் பகுதியில் ஒரு விமான நிலையத்தை ஏன் அமைக்கக்கூடாது? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.





www.keelainews.in

இதுகுறித்து மத்தியமாநில அரசுகள் பதில் அளிக்கும்படி நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

பின்னர் தமிழ்நாட்டில் Udan திட்டத்தில் உள்ள விமான நிலையங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்று 3/02/2021 அன்று மாநிலங்களை உறுப்பினர் P. வில்சன் எழுப்பிய கேள்விக்கு இராமநாதபுரம் மாவட்டம் உச்சபுள்ளி விமான நிலையத்திற்கு மத்திய அரசு 36.72 கோடி ஒதுக்கி உள்ளது என்று அப்போதைய மத்திய விமான போக்குவரத்து துறை அமைச்சர் பதில் அளித்தார்,ஆனால் இதுவரை இது வரை ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை,INS பருந்து கடற்படை விமான நிலையம் சார்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே விமான ஒடு தளத்தை விரிவாக்கம் செய்ய வேண்டி மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதி வேண்டி அனுப்பினார்,கடந்த 2022 ஆம் ஆண்டு தான் ஒடு தள விரிவாக்கத்திற்கு அனுமதி கொடுத்தது.

ராமேஸ்வரத்தில் இருந்து 35 கி.மீ.,, ராமநாதபுரத்தில் இருந்து 20 கி.மீ.,ல் உச்சிப்புளியில் ஐ.என்.எஸ்.பருந்து கடற்படை விமான தளம் உள்ளது. இங்கு இரண்டாம் உலக போரின் போது பயன்படுத்தி கைவிடப்பட்ட விமான தளத்தில் 1982ல் இந்திய கடற்படை விமான



தளம் அமைத்தது. இங்கிருந்து மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பகுதிகளில் கண்காணிப்பு மேற்கொள்கின்றனர். 920 மீ., நீள ஓடுதளம் உள்ளது. ஐலண்டர், டோர்னியர், சேட்டாக், ஆளில்லா விமானங்கள், ஹெலிகாப்டர்கள் இயக்கப்படுகின்றன.

எல்லை தாண்டி மீன்பிடிப்பது, போதைப்பொருள் கடத்தலை தடுப்பது போன்ற பணிகளில் இங்கிருந்து ஈடுபடுகின்றனர். பயணிகள் விமானங்கள் இயக்க 2 கி.மீ., நீள ஓடுதளம் தேவை. அடுத்த பத்து ஆண்டுகளில் 2600 மீ. நீள ஓடுதளம் கொண்ட பெரிய கடற்படை விமான தளமாக ஐ.என்.எஸ்., பருந்தை மாற்றவும் திட்டம் உள்ளது.என்றும் உச்சிப்புளி கடற்படை விமான தளத்திலிருந்து, மத்திய அரசின் உதான் திட்டத்தில் பயணிகள் விமானங்களும் இயக்குவதற்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ளது. நிலம் உள்ளிட்டவற்றை தமிழக அரசு செய்து தர வேண்டும். இதற்கு 2021ல் மத்திய அரசு ரூ.36.72 கோடி ஒதுக்கீடு செய்தது. பின்னர் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.பிறகு UDAN 4.2 ஏலத்தின் கீழ் 14.12.2022 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட விமான சேவை நிறுவனத்திற்கு உண்டான சிறிய ரக விமானத்தை இயக்கினால் ஆகும் செலவு என்ன என்று இந்திய விமான நிலைய ஆணையம் AAI/RCS-4.2/2023-24V நிதிக்கான அட்டவணை மற்றும்

GOVERNMENT OF INDIA
MINISTRY OF CIVIL AVIATION
LOK SABHA
UNSTARRED QUESTION NO. : 773
(To be answered on the 7th December 2023)

UDAN SCHEME FOR TAMIL NADU

773. SHRI SELVAM G.

Will the Minister of CIVIL AVIATION
नागर विमानन मंत्री be pleased to state:-

(a) whether the Government proposes to add more airports across the country for improving regional connectivity under Udan Scheme and if so, the details thereof;
(b) whether it is a fact that development of smaller, existing airports in Tamil Nadu is yet to take off under Udan Scheme and if so, the details thereof and if not, the reasons therefor;
(c) the corrective steps taken by the Government in this regard;
(d) the contribution of UDAN scheme in the overall development of Civil Aviation Sector;
(e) whether Airport Authority of India (AAI) has embarked upon development and expansion of airports in the country, if so, the details thereof and the amount allocated and utilized for the purpose; and
(f) the other steps taken by the Government to enhance regional air connectivity from unserved and underserved airports in the country to make air travel affordable to the masses?

ANSWER

Minister of State in the Ministry of CIVIL AVIATION
नागर विमानन मंत्रालय में राज्य मंत्री (GEN. (DR) V. K. SINGH (RETD))

(a) Under Phase-I of the scheme for 'Revival and Upgradation of unserved and underserved Airports/Heliports/Water Aerodromes, the Government has targeted development of 100 Aerodromes. 76 Aerodromes including 2 Water Aerodromes and 9 Heliports have been operationalised so far. Under Phase-II of the scheme, additional 50 aerodromes have been targeted to be developed.

(b) to (c): Five airports, namely, Vellore, Neyveli, Salem, Ramnad and Thanjavur have been identified for development and operationalisation under the UDAN Scheme in the State of Tamil Nadu. Salem Airport has already been operationalised. Development works at Vellore and Neyveli have

GOVERNMENT OF INDIA
MINISTRY OF CIVIL AVIATION
LOK SABHA
UNSTARRED QUESTION NO. : 192
(To be answered on the 2nd February 2023)

SETTING UP OF AIRPORT AT RAMNAD

192. SHRI K. NAVASKANI

Will the Minister of CIVIL AVIATION
नागर विमानन मंत्री be pleased to state:-

(a) whether the Union Government proposes to set up an airport in Ramnad district in Tamil Nadu and if so, the details thereof;
(b) whether setting up of the said airport in the district would boost the economy and tourism and if so, the details thereof; and
(c) the time by which the said airport is likely to be set up?

ANSWER

Minister of State in the Ministry of CIVIL AVIATION
नागर विमानन मंत्रालय में राज्य मंत्री (GEN. (DR) V. K. SINGH (RETD))

(a) to (c): Ministry of Civil Aviation (MoCA) launched Regional Connectivity Scheme (RCS)- Ude Desh Ka Aam Nagrik (UDAN) on 21.10.2016. UDAN is a demand-driven scheme. The selection of airlines is made through a transparent bidding process.

Ramnad Airport, owned by the Ministry of Defence (Navy) was identified in the 3rd round of bidding under the UDAN scheme for the development and to operate flights. As per the provisions of the Scheme document, the State Government has to provide minimum land, as required for operationalisation of Ramnad Airport, free of cost and free from encumbrances for revival/development of the UDAN airport.

UDAN route connecting Ramnad to Chennai has been awarded to the Selected Airline Operator on 14.12.2022 under UDAN 4.2 round of bidding. Selected Airline Operators (SAOs) under UDAN are obligated to commence the flight operations on a route within a period of 180 days from the issuance of Letter of Award or within two months from the readiness of airport, whichever is later, unless any extension is granted by the Implementing Agency.

GOVERNMENT OF INDIA
MINISTRY OF CIVIL AVIATION
Lok Sabha
UNSTARRED QUESTION NO. : 595
( TO BE ANSWERED ON THE 25th July 2024 )

UDAN SCHEME FOR TAMIL NADU

595. SHRI NAVASKANI K
Will the Minister of CIVIL AVIATION
be pleased to state:-

(a) the details of development of projects under UDAN scheme in Tamil Nadu;
(b) the details of the measures being implemented to encourage more Selected Airline Operators (SAOs) to initiate UDAN flights from the unserved and underserved airports in Tamil Nadu;
(c) whether the Government has implemented specific measures to facilitate the commencement of UDAN flights from airports such as Ramanathapuram, Neyveli, Vellore and Tanjore in Tamil Nadu and if so, the details thereof; and
(d) the details of the update on the progress made towards achieving the target of operationalizing 1000 UDAN routes by 2024 along with the details of the specific initiatives undertaken in Tamil Nadu?

ANSWER

Minister of State in the Ministry of CIVIL AVIATION
(Shri Murlidhar Mohol)

(a) to (c) In the State of Tamil Nadu, five (05) airports namely, Salem, Tanjore, Ramnad, Vellore and Nevyeli have been identified for development and operation of flights under UDAN Scheme, out of which operations of flights at Salem have commenced. Licensing of Vellore and Nevyeli is under progress. State Government is yet to provide suitable land for development of civil enclave at Ramnad. At Tanjore, construction of civil enclave can be taken up by AAI on provision of required Approach Road by the State Government.;




**எல்லை தாண்டி மீன்பிடிப்பது, போதைப்பொருள் கடத்தலை தடுப்பது போன்ற பணிகளில் இங்கிருந்து ஈடுபடுகின்றனர். பயணிகள் விமானங்கள் இயக்க 2 கி.மீ., நீள ஓடுதளம் தேவை. அடுத்த பத்து ஆண்டுகளில் 2600 மீ. நீள ஓடுதளம் கொண்ட பெரிய கடற்படை விமான தளமாக ஐ.என்.எஸ்., பருந்தை மாற்றவும் திட்டம் உள்ளது.என்றும் உச்சிப்புளி கடற்படை விமான தளத்திலிருந்து, மத்திய அரசின் உதான் திட்டத்தில் பயணிகள் விமானங்களும் இயக்குவதற்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.**

காலாண்டுக்கான RCS இருக்கைக்கான அதிகபட்ச விமானக் கட்டணம் பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் சென்னை இராமநாதபுரம் சென்னை 414 கிலோ மீட்டர் பயண தூரம் உள்ள 9 நபர்களை கொண்டு செல்ல கூடிய சிறிய ரக விமானத்தை இயக்கினால் என்ன கட்டணம் என்ற ஏலத்தில் மூலம் நிர்ணயக்கப்பட்டது.குறைந்தபட்ச விமான கட்டணம் ₹21355/, அதிகபட்ச விமான கட்டணம் ₹25312/ என்று மாதிரி அட்டவணை உருவாக்கப்பட்டது.

பிப்ரவரி/2/ 2023 ல பார்லிமென்டில் ரி.நவாஸ் கனி. விறி எழுப்பிய கேள்விக்கு மத்திய விமான போக்குவரத்து துறை இணை அமைச்சர் வி.கே.சிங் அளித்த பதிலில் உச்சிப்புளியில் உள்ள ஐ.என்.எஸ்., கடற்படை விமான தளம் விரிவாக்கம் செய்யப்பட்டு உள்நாட்டு விமான போக்குவரத்து துவங்க உள்ளதாக தெரிவித்துள்ளார், அதற்க்கு தமிழ்நாடு மாநில அரசு இலவசமாக இடம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டு இருந்தனர்.

அதன் பின்னர் விமான நிலைய ஒடுபாதை ஒட்டி ரயில் பாதை உள்ளது அதை மாற்ற மாநில அரசு கொடுக்க வேண்டும் அல்லது விமான நிலைய நுழைவாயில் அருகில் ராமேஸ்வரம் செல்லும் நெடுஞ் சாலை உள்ளது. அதை மாற்ற வேண்டும்,அது போக அருகில் வைகை நதி நீர் ஓடும் பாதை வேறு உள்ளது.இந்த மூன்று பெரும் பிரச்சினை இருப்பதால் உடனடியாக முடிவு எடுக்க முடியாமல் மத்திய மாநில அரசுகள் தயங்கியது,இருந்தாலும் மத்திய அரசு விமான நிலையம் அமைக்க முன் வருவதால் விரிவாக்கத்திற்கு மாநில அரசு இடம் கொடுக்க வேண்டும்.அதன் பின்னர் தான் கட்டுமான பணி முடிந்து விமான சேவை நடக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் தற்போதைய விமான ஒடுதளத்தில் 17 பேர் செல்லக் கூடிய டார்நியர் விமானத்தை இயக்க முடியும்.தற்போது புதுச்சேரி விமான நிலையத்தில் 19 பயணிகளை மட்டும் கொண்டு செல்லும் வகையில் விமான சேவை அறிமுகம் செய்ய பட உள்ளது, அது போல மாநில அரசு முடிவு செய்தால் உடனடியாக விமான சேவை தொடங்கும்.இல்லை என்றால் 78 நபர்கள் அமரக்கூடிய வகையில் உள்ள ATR72 Aircraft வகை விமானங்களை இயக்க வேண்டும் என்றால்,இது நடக்க பல வருடங்கள் காத்து இருக்க வேண்டிய நிலைவரும் என்று மக்கள் நினைக்கின்றனர். அடுத்ததாகமக்களவையில் 07/12/2023 அன்று G.செல்வம் MP எழுப்பிய கேள்விக்கு இராமநாதபுரம் விமான நிலையத்திற்கு உண்டான இடத்தை மாநில அரசு சிவில் என்கிளேவ் விற்கு ஒப்படைக்க பட உள்ளது என்று சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் பதில் கூறினார்.





பிறகு பாராளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் மறுமுறை திரும்ப வென்ற பின்னர் திரு .K.நவாஸ் கனி மக்களவையில் 25/07/2024 அன்று இராமநாதபுரம் விமான நிலைய பணிகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு மத்திய விமான போக்குவரத்து துறை இணை அமைச்சர் கூறிய பதிலில் மாநில அரசு சிவில் என்கிளேவ் விற்கு பொருத்தமான நிலத்தை இன்னும் ஒப்படைக்க வில்லை என்று பதில் அளிக்கப்பட்டு உள்ளது. (சிவில் என்கிளேவ் என்பது சிவில் விமானப் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இராணுவ விமானத் தளத்தின் ஒரு பகுதி) பிறகு 29/07/2024 அன்று மாநிலங்களை உறுப்பினர் வி.தம்பிதுரை கேட்ட கேள்விக்கு இராமநாதபுரம் விமான நிலையம் திறக்க மாநில அரசு இன்னும் பொருத்தமான இடத்தை வழங்கவில்லை என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் பதில் அளித்துள்ளார்.எனவே இராமநாதபுரம் விமான நிலைய விரிவாக்கத்திற்கு இடங்களை கையகபடுத்த மாநில அரசு முன் வர வேண்டும்.

***சமூக ஆர்வலர் சேகு சதக்கு இப்ராஹிம்***

# மதுபான கடைகள்

## குறைக்கப்படுவது எப்போது?






**மதுபானக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய சூழலில், டாஸ்மாக் நிறுவனம் புதிய கடைகளைத் திறந்துகொண்டே போவது வருந்தத்தக்கது.**

தேனி மாவட்டம் பூத்திபுரம் கிராமத்தில் ராஜபூபால சமுத்திரக் கண்மாய் அருகே டாஸ்மாக் புதிய கடை ஒன்றைத் திறக்க இருந்தது. இதை எதிர்த்து அவ்வூரைச் சேர்ந்த வழக்கறிஞர் குமாரலிங்கம், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்தார். 'மதுபானக் கடை தொடங்க உள்ள இடத்தின் அருகில் பெண்களுக்கான பொதுக்கழிப்பிடம் அமைந்துள்ளது. தேசிய நெடுஞ்சாலையும் ரயில் பாதையும் இருப்பதால், மதுபானம் அருந்துபவர்கள் போதையில் விபத்துக்குள்ளாக வாய்ப்பு இருக்கிறது. முன்பு இருந்த மதுபானக் கடை அகற்றப்பட்ட இடமாகவும் இது உள்ளது. ஏற்கெனவே மூன்று மதுபானக் கடைகள் இப்பகுதியில் நடத்தப்படுகின்றன. நான்காவதாக இன்னொன்றை டாஸ்மாக் தொடங்க முயல்கிறது.

மதுபானச் சில்லறை விற்பனைக் கட்டிட விதிமுறைகளுக்கு முரணாக அமையவுள்ள இந்தக் கடையை அனுமதிக்கக் கூடாது' என்பதே அவரது முறையீடு. டிசம்பர் 27ல் மனுவை விசாரித்த நீதிபதிகள் வேல்முருகன், ஜோதி ராமன் ஆகியோர், கடை திறக்கத் தடை விதித்தனர்.

"தற்போது மூலை முடுக்குகளில் எல்லாம் மதுபானக் கடைகள் உள்ளன. பள்ளி, கல்லூரிகளுக்கு அருகிலும் இவை திறக்கப்படுகின்றன. இந்நிலையில், அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் குடிக்கு எதிராக அரசு விழிப்புணர்வு விளம்பரம் செய்வது முரணாக உள்ளது. கடைகளை அதிகப்படுத்திவிட்டு விளம்பரம் செய்வதால் என்ன பயன்? மதுபானக் கடைகளைக் குறைப்பதற்கு வழி பாருங்கள்" என அரசுக்குச் சில அறிவுறுத்தல்களையும் நீதிபதிகள் வழங்கியுள்ளனர்.

500 மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளதாக செப்டம்பர், 2024இல் தமிழகத்தின் அப்போதைய மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி தெரிவித்தார். ஒரு கடையை மூடினால், மது அருந்துவோர் அதே பகுதியில் உள்ள இன்னொரு கடைக்குச் சென்று மது அருந்துவதைத் தடுக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் குடிப் பழக்கத்தைக் கைவிட அரசு சார்பில் ஆலோசனைகள் வழங்குவதாகவும் கூறினார்.

ஒரே நாளில் அனைவரும் குடியை விட்டுவிட முடியாது; அனைத்துக் கடைகளையும் அரசு ஒரே நாளில் மூடிவிடவும் முடியாது என்கிற நடைமுறைச் சாத்தியங்களுக்கு உட்பட்டுதான் நிர்வாகம் இந்தப் பிரச்சினையில் செயல்பட இயலும். எனினும், ஏற்கெனவே கடை மூடப்பட்ட பகுதியில் மீண்டும் கடை திறக்க டாஸ்மாக் முயல்வது, தவறான நடவடிக்கை. தீர்வை நோக்கிய அரசின் நடவடிக்கைகள் மீதான நம்பிக்கையை மக்கள் இழப்பதற்கு இது வழிவகுக்கும்.

2022–2023இல் டாஸ்மாக் ஈட்டிய வருமானம் ஏறக்குறைய 44,121 கோடி ரூபாய். இதை ஈடுகட்டும்வகையில் மாற்று வருவாய்க்கு வழி காண்பது, டாஸ்மாக் கடை ஊழியர்களுக்கு மாற்றுப் பணிகள் ஒதுக்கீடு செய்வது உள்பட பெரும்பணிகள் அரசின் முன் உள்ளன. குடிநோய்க்கு முற்றுப்புள்ளி வைப்பது என்கிற இலக்கை அடைவது மிகக் கடினமான பயணம். குறுகிய கால லாபத்துக்காகப் புதிய கடைகளைத் திறந்து, அந்தப் பயணத்தை டாஸ்மாக் கூடுதல் சிக்கல் ஆக்கிக்கொள்ளக் கூடாது.

# வெற்றிக்காக விதிகளை மிதிக்கும் கம்பீர்!

**சிவம் துபே... ஆல்ரவுண்டர். ஹார்ஷித் ராணா... வேகப்பந்து வீச்சாளர். சிவம் துபேவை பல சமயங்களில் 2 ஓவர்கள் வீசுவதற்குத்தான் பயன்படுத்து வார்கள். அதுவும்கூட சிலசமயங்களில் பயன்படுத்து வதில்லை.**

கௌதம் கம்பீர், இப்போது மிகப்பெரிய அழுத்தத்துக்கு ஆளாகியிருக்கிறார். படாடோபமான பில்டப் எல்லாம் கொடுக்கப்பட்டு, இந்திய அணியின் கோச் (பயிற்சியாளர்) என்கிற மாபெரும் பொறுப்பை ஏற்றவர், அவர். ஆனால், தற்போது தொடர் தோல்விகளை மட்டுமே சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமான பி.சி.சி.ஐ, கம்பீர்மீது தன்னுடைய கறாரான பார்வையைப் பதிக்கத் தொடங்கிவிட்டது. தோல்விகள் தொடர்ந்தால் கடினமான முடிவுகளைக் கூட பி.சி.சி.ஐ எடுக்கும் என்பதே தற்போதைய நிலை. ஆகக்கூடி, கம்பீரின் தலைக்கு மேல் கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே, இப்படி பஞ்சாயத்து போய்க் கொண்டிருக்கும் நிலையில்தான், இப்போது கம்பீர் செய்திருக்கும் இன்னொரு காரியம், கடும்விமர்சனங்களைக் கிளப்பியிருப்ப துடன், அவரையும் அழுத்தத்துக்கு ஆளாக்கியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டி20 போட்டியில் ஆட்டத்தின் இடையில்





சிவம் துபேவுக்கு பதிலாக ‘சப்ஸிடிடியூட்’ (Concussion Substitute) என்கிற விதியின் அடிப்படையில், ஹர்ஷித் ராணாவை இறக்கிவிட்டு, போட்டியை வென்றிருக்கிறார்கள். இந்த விதியின்படி, ஒத்த பண்புடைய (like to like) வீரர்களைத்தான் மாற்றுவீரராக இறக்க வேண்டும்.

ஐ.சி.சியின் 1.2.7 சட்டவிதியின்படி, இந்த விஷயத்தில் போட்டி நடுவரே ஆய்ந்து முடிவை எடுக்க வைக்கவேண்டும். இதுகுறித்த கோரிக்கையை ஓர் அணி முன் வைக்கும்போது, அவர்கள் ஒத்த பண்புடைய வீரரைத்தான் மாற்று வீரராகக் களமிறக்க வேண்டும். அப்படி இறக்கிவிடப்படும் வீரரால், அவர்களுக்குக் கூடுதல் பலன் கிடைக்காது என்பவற்றையெல்லாம் உறுதி செய்ய வேண்டும்’ என அந்த விதி கூறுகிறது.







ஒரு வீரருக்கு தலை மற்றும் கழுத்துப் பகுதியில் அடிபட்டால், இந்த விதியைப் பயன்படுத்த முடியும். சிவம் துபே ஹெல்மெட்டில் அடி வாங்கியிருக்கிறார். அவருக்கு லேசான தலைவலியும் இருந்திருக்கிறது. அந்த அடிப்படையில், அவருக்கு பதிலாக வேறொருவரைப் பயன்படுத்துவோம் என முடிவெடுத்ததில் எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு யாரைக் களமிறக்கினர் என்பதில்தான் பிரச்னை.

சிவம் துபே... ஆல்ரவுண்டர். ஹர்ஷித் ராணா... வேகப்பந்து வீச்சாளர். சிவம் துபேவை பல சமயங்களில் 2 ஓவர்கள் வீசுவதற்குத்தான் பயன்படுத்துவார்கள். அதுவும்கூட சில சமயங்களில் பயன்படுத்துவதில்லை. கடைசியாக... 12 போட்டிகளில் 9 ஓவர்களை மட்டும்தான் வீசியிருக்கிறார். கிட்டத்தட்ட முழுமையான பேட்டராகத்தான் ஆடி வருகிறார். இருந்தாலும் ஆல் ரவுண்டர் என்றே வைத்துக் கொள்வோம். அப்படிப் பார்த்தாலும் ஹர்ஷித் ராணா, எந்த வகையிலும் சிவம் துபேவுக்கு ஒத்த பண்புடைய வீரராகக் கருதவே முடியாது.

இதுதான் பிரச்னை. இந்த விதிமுறை கம்பீருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பே இல்லை. பல ஆண்டுகளாக கிரிக்கெட் ஆடியவர். பயிற்சியாளராகவும் ஆலோசகராகவும் இருந்த அனுபவமும் இருக்கிறது. அப்படிப்பட்டவருக்கு தன்னுடைய அணியில் ஒரு விதியை சரியாகக் கடைப்பிடிக்க முடியாமல்போனது ஆச்சர்யம்தான்.

இங்கே ஒரு சந்தேகம் எழும். அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ். அவர் மீதுதானே புகார் கூற வேண்டும் என்று கேள்வி எழுப்பினால்...

‘`ஆனால், இந்திய அணியைப் பொறுத்த வரைக்கும் அதெல்லாம் பொருந்தாது. ஏனெனில், கம்பீர் ஒரு கிரிக்கெட் கோச் போல இல்லை. கால்பந்து கோச் போல இருக்கிறார். எல்லா முடிவுகளையும் அவரே எடுக்கிறார். ஃபீல்டில் என்ன நடக்க வேண்டும் என்பதைக்கூட அவர்தான் தீர்மானிக்கிறார். அதனால் தான் கம்பீர் தற்போது அதிகப் படியான விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளார்’’ என்பது தான் பதிலாக இருக்கிறது!

இந்திய அணிக்கென ஒரு மாண்பு இருக்கிறது. தோல்விகள் தொடர்ந்தாலும் அந்த மாண்பைக் குலைக்கும் வேலைகளில் கம்பீர் ஈடுபடக் கூடாது என்பதே ரசிகர்களின் விருப்பம்.

### அடுத்த 3 மாதத்தில் குட் நியூஸ்..

# மகளிர் உரிமைத்தொகை ரூ.1000 வரப்போகிறது!

## உதயநிதி சொன்ன தகவல்



**அடுத்த 3 மாதங்களில் தமிழ்நாட்டில் அனைத்து தகுதி உள்ள மகளிருக்கும் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ராமநாதபுரத்தில் நடந்த திருமணம் ஒன்றில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.**

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களில் பல லட்சம் பேர் புதிய ரேஷன் கார்டுக்கு விண்ணப்பித்து இருந்தனர். இப்படி தமிழ்நாட்டில் புதிதாக திருமணம் ஆனவர்கள், புதிதாக குடியேறியவர்கள், தனி வீடு பிரிந்தவர்கள் பலர் ரேஷன் கார்டுகளை வாங்க தொடங்கி உள்ளனர். இப்படி ரேஷன் கார்டு வாங்க விண்ணப்பித்தவர்கள் ஒருவர் இருவர் இல்லை. மொத்தமாக 2.80 லட்சம் பேர். இதில் இதுவரை ரேஷன் கார்டு வழங்கப்படாத மீதம் உள்ள ரேஷன் கார்டுகள் அடுத்த 2 வாரங்களில் பெரும்பாலும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

தமிழ்நாட்டில் ரேஷன் கடைகளில் சென்று பொருட்கள் வாங்குபவர்களுக்கு ஒரு நல்ல செய்தி வந்துள்ளது. அதன்படி ரேஷன் கடைகளில் தற்போது வரை விண்ணப்பித்த 2.80 லட்சம் பேரில் 1 லட்சம் பேருக்கு புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படவில்லை. 1.80 லட்சம் பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது. ரேஷன் கார்டில் இருந்து பெயர் சேர்ப்பு, பெயர் நீக்கம் செய்வதற்கு புதிய முறை கடைபிடிக்கப்படுவதால் மக்கள் அவதிப்பட்டு வருவதாக கூறப்படுகிறது. இதனால் சில தாமதங்கள் ஏற்பட்டன. இந்த தாமதங்கள் களையப்பட்டு.. தற்போது ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் விண்ணப்பங்களை மேற்கொண்டு 1 வருடத்திற்கு மேல் ஆகிறது. ஆனால் இவர்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்படாமல் போனதற்கு காரணம் லோக்சபா தேர்தல். லோக்சபா தேர்தல் விதிகள் காரணமாக ரேஷன் கார்டுகளை கொடுக்க முடியவில்லை. அதன் சரிபார்ப்பு பணிகளை செய்ய முடியவில்லை.



www.keelainews.in

இப்போது அதெல்லாம் முடிந்து ரேஷன் கார்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. கொஞ்சம் கொஞ்சமாக ஸ்மார்ட் கார்டு வடிவில் வழங்கப்படுகின்றன. ஆனாலும் இன்னும் பலருக்கு ரேஷன் கார்டுகளை வழங்கவில்லை.. புதிய விண்ணப்பங்களை ஆய்வு செய்யவில்லை என்று புகார்கள் உள்ளன.

மகளிர் உரிமை தொகை: புதிதாக விண்ணப்பித்துள்ளவர்களுக்கு 3 மாதத்தில் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டு உள்ளார்.

இனி புதிதாக மகளிர் உரிமை தொகைக்கு விண்ணப்பம் செய்தால்.. அந்த விண்ணப்பங்கள் ஏற்க முடியுமா என்ற கேள்விக்கு தமிழ்நாடு சட்டசபையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்பே பதில் அளித்திருந்தார். யாருக்கும் விடுபடாமல் எப்படி மகளிர் உரிமைத் தொகை வழங்க முடியுமோ அப்படி வழங்கி வருகிறோம். எவ்வளவு பேருக்கு கூடுதலாக வழங்க முடியுமோ விதிகளுக்கு உட்பட்டு அவர்களுக்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் புதிதாக விண்ணப்பித்துள்ள தகுதியான அனைவருக்கும் 3 மாதத்தில் ரூ.1,000 உரிமைத்தொகை தரப்படும் என்று சட்டசபையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார்.

மகளிர் உரிமை தொகை: தமிழ்நாட்டில் புதிய ரேஷன் கார்டு பெற்றவர்களுக்கு வரும் நாட்களில் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே முன்னாள் அரசு ஊழியர்களின் மனைவிகள், கார்ப்பரேஷன் ஊழியர்களின் மனைவிகள் ஆகியோர்களுக்கு எல்லாம் இந்த திட்டத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் ஏற்கனவே பென்ஷன் பெறக்கூடிய பெண்கள், அரசின் வேறு நிதிகளை வங்கியில் பெற கூடிய பெண்களுக்கு பணம் வழங்கப்படவில்லை. இவர்களுக்கு திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் போது அதற்கான அறிவிப்புகள் வரலாம் என்று கூறப்படுகிறது . வேறு சில ஆவணங்கள் சரியாக இல்லாத பெண்களுக்கும் பணம் வழங்கப்படவில்லை, அரசின் வேறு நிதிகளை வங்கியில் பெற கூடிய பெண்களுக்கு இந்த திட்டத்தில் இப்போது என்று இல்லாமல் எதிர்காலத்திலும் வாய்ப்பு வழங்கப்படலாம் என்கிறார்கள்,. மாறாக ஆவணங்கள் சரியில்லாத பெண்கள், இனி திருமணம் ஆகி குடும்ப தலைவி ஆகும் பெண்கள் ரூ.1000 பெறுவதற்கு விண்ணப்பம் செய்யலாம். இப்போது செய்ய முடியாது என்றாலும் அடுத்த சில நாட்களுக்கு பின் திட்டத்தை விரிவாக்கம் செய்வது தொடர்பான அறிவிப்பு வெளியாகலாம் என்கிறார்கள். அப்போது விடுபட்டவர்கள் விண்ணப்பங்களை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.




## அமைச்சர் விளக்கம்

ஏற்கனவே கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள அனைவருடைய விண்ணப்பங்களையும் பரிசீலித்து, தகுதியுள்ள அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பதே அரசின் இலக்காகும் என்று விளக்கம் அளித்துள்ளார். முன்னதாக தமிழ்நாடு ரேஷன் கார்டு உள்ள அனைவருக்கும் 'மகளிர் உரிமைத்தொகை' என பேசியதாக தகவல் வெளியான நிலையில் அதனை மறுத்து அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் எக்ஸ் தளத்தில் விளக்கம் அளித்துள்ளார். மகளிர் உரிமை தொகை விரிவாக்கம் செய்யப்படும். ஆனால் இதற்காக ரேஷன் கார்டு உள்ள எல்லோருக்கும் இந்த திட்டத்தின் கீழ் பணம் தரப்பட்டது. மாறாக விண்ணப்பித்துள்ள அனைவருடைய விண்ணப்பங்களையும் பரிசீலித்து, தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கப்படும். தகுதி இல்லாதவர்களுக்கு பணம் வழங்கப்பட வாய்ப்பு இல்லை என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.



## குவியும் பாலித்தீன் குப்பைகள்





# அசுத்தமாக காட்சியளிக்கும் அழகிய அரியமான் கடற்கரை.!








**இயற்கை எழில் நிறைந்த அரியமான் கடற்கரை பகுதியில் பாலித்தீன் குப்பைகள் குவிந்து வருவதால் கடற்கரை பகுதி அசுத்தமாகி வருகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் வருகையும் குறைந்து காணப்படுகிறது.**

ராமநாதபுரத்துக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடையே அரியமான் கடற்கரை அமைந்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து 27 கிலோ மீட்டர் தொலைவிலும், ராமேஸ்வரத்தில் இருந்து 28 கிலோமீட்டர் தொலைவிலும் அழகிய அரியமான் கடற்கரை அமைந்துள்ளது. இந்த கடற்கரை 150 மீட்டர் அகலமும், 2 கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டுள்ளது.

இந்த கடற்கரைக்கும் செல்லும் வழியில் உள்ள தென்னை, பனைமரங்கள் சூழ்ந்த வயல்பகுதிகள் கண்ணை பறிப்பதாக உள்ளன. இதைத் தாண்டி














சென்றால் இன்னும் பிரமிப்பு ஏற்படுத்தும் சவுக்கு மரங்கள் அடர்ந்த பகுதி வருகிறது.

ராமேஸ்வரத்துக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் ராமநாதசுவாமி கோயில், கோதண்டராமர் கோயில், ராமர் தீர்த்தம், வில்லூண்டி தீர்த்தம், ராமர் பாதம், தனுஷ்கோடி கடற்கரை, ஓலைக்குடா கடற்கரை, பாம்பன் பாலம் போன்ற இடங்களை பார்த்து விட்டு, அரியமான் கடற்கரைக்கும் சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள்.

இந்த நிலையில் அரியமான் கடற்கரை பகுதியில் குவியும் பாலித்தீன் குப்பைகளால் கடற்கரை பகுதி அசுத்தமாக காட்சி அளிக்கிறது. இதன் காரணமாக, மண் வளமும், நிலத்தடி நீர்வளமும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனை தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், அங்கு பகல் மற்றும் இரவு நேரங்களில் மது பிரியர்கள் மது குடித்துவிட்டு பாட்டில்களை வீசி செல்வதால் கடற்கரை முழுவதும் உடைந்த கண்ணாடி துண்டுகளும் மது பாட்டில்களும் காணப்படுகிறது. இது சுற்றுலா பயணிகளை முகம் சுளிக்க வைக்கிறது. அதுமட்டுமின்றி, கடற்கரையில் சுத்தமான கழிப்பறை, முறையான பார்க்கிங் வசதி, குடிநீர் வசதிகள் என அடிப்படை வசதிகளும் இல்லை எனவும் சுற்றுலாப் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.





## திருப்பரங்குன்றம் கோயில் – தர்ஹா விவகாரம்:

# அரசின் மௌனம் ஏன்?

## இதுவரை நடந்தது என்ன?

**நவாஸ்கனியை கடுமையாக பேசி திருப்பரங்குன்றத்திற்கு இரண்டு முறை செல்ல முயன்ற வேலூர் இப்ராகிம் கைது செய்யப்பட்டார். அவர் மீது நடவடிக்கை எடுக்க மதுரை மாவட்ட ஐக்கிய ஜமாத் காவல்துறையில் புகார் கொடுத்துள்ளது. திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தர்ஹாவுக்கு ஆடு கோழி கொண்டு செல்லக் கூடாது, என்று காவல்துறை போட்ட உத்தரவுக்கு எதிராக இஸ்லாமிய அமைப்புகளும் அதை எதிர்த்து இந்து இயக்கங்களும் மாறி மாறி குற்றம் சாட்டி போராட்டங்களை நடத்தி வருகின்றன.**



முருகனின் முதல் படைவீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோயில் அமைந்திருக்கும் மலையின் மேலே சுல்தான் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்ஹாவும் அமைந்துள்ளது.

இது இஸ்லாமிய துறவியான ஹஜ்ரத் சுல்தான் சிக்கந்தர் பாதுஷாவின் கல்லறை என்று கூறப்படுகிறது. திருப்பரங்குன்றத்தில் உள்ள சிக்கந்தர் மலையின் கீழ் பகுதியில் காசி விஸ்வநாதர் கோயிலும், அங்கிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் மலையின் மேல் பகுதியில் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா தர்காவும் உள்ளது.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, மதுரையை ஆட்சி செய்த பாண்டிய மன்னன் 40 ஏக்கர் பரப்பளவு நிலத்தை தர்காவிற்கு நன்கொடையாக வழங்கியதாக கூறப்படுகிறது. தர்காவிற்கு அருகிலுள்ள இடம் காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சொந்தமானது என கோயில் தரப்பினர் கூறி வந்தனர். ஆனால், அந்தப் பகுதி தர்காவிற்கு சொந்தம் என கடந்த 1975ஆம் ஆண்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தற்போது இந்த தர்காவில் ஆண்டுதோறும், ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளின்போது இஸ்லாமியர்கள் தொழுகை நடத்தி வருகின்றனர். இதேபோல், ஆண்டுதோறும் ரஜப் பிறை மாதத்தில் சந்தனக்கூடு திருவிழா நடைபெறும். அங்கு தர்கா இருந்தபோதும், திருப்பரங்குன்றம் மலை மீது இஸ்லாமியர்கள் வழிபட இந்துத்துவா அமைப்பினர் நீண்ட காலமாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த மாதம் இந்த தர்ஹாவில் கந்தூரி கொடுக்க ஆடு, சேவலுடன் வந்த இஸ்லாமிய குடும்பத்தினர் காவல்துறையால் தடுத்து நிறுத்தப்பட்டதிலிருந்து பிரச்னை தொடங்கியது. தங்கள் வழிபாட்டு உரிமையை தடுப்பதாக திருப்பரங்குன்றம் ஜமாத் நிர்வாகிகளும் முஸ்லீம் லீக், எஸ்.டி.பி.ஐ உள்ளிட்ட அமைப்புகளும் அப்போதே போராட்டம் நடத்த, மாவட்ட நிர்வாகமோ 'தர்ஹாவுக்கு வழிபடச் செல்வதை தடுக்கவில்லை. ஆடு, கோழி கொண்டு செல்வதைத்தான் தடுக்கிறோம்' என்று அறிவிக்க, அதோடு இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட அமைப்புகள், 'திருப்பரங்குன்றம் மலை மீது உயிரினங்கள் பலி கொடுப்பதையும், அசைவம் சாப்பிவதையும் அரசு தடுக்க வேண்டும்'



என்று வலியுறுத்தி போராட்டத்தில் இறங்க என்று பிரச்னை பெரிதாகத் தொடங்கியது. இந்த நிலையில் கடந்த 18 ஆம் தேதி ஆடு, கோழியுடன் கந்தூரி விழா நடத்த உள்ளதாக இஸ்லாமியஅமைப்பினர் அறிவிப்பு செய்து கிளம்பி வர, அதை எதிர்த்து இந்து முன்னணியினர் திரள, மலைக்கு மேல் ஆடு, கோழி கொண்டு செல்லாமல் காவல்துறை தடுக்க என திருப்பரங்குன்றத்தில் பதற்றம் ஏற்பட்டது.

தற்போது தர்ஹாவுக்கு ஆடு, கோழி கொண்டு செல்ல தடைவித்து மலையேறும் பகுதியில் தொடர்ந்து காவல்துறை கண்காணிப்பில் இருந்து வருகிறது. ஆனாலும், இரண்டு மத அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் தினமும் திருப்பரங்குன்றத்துக்கு வருவதும், அதிரடியாக பேசுவதும்தான் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் வஃபு வாரியத் தலைவர் நவாஸ்கனி எம்.பி, திருப்பரங்குன்றம் மலையில் சென்று பார்வையிட அவருடன் வந்தவர்கள் மலைப்பகுதியில் அமர்ந்து அசைவ உணவு சாப்பிட்டார்கள் என்று பாஜக தலைவர் அண்ணாமலையும், இந்து முன்னணித் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியன் உள்ளிட்டவர்கள் குற்றம்சாட்ட, "நான் அங்கு உணவு சாப்பிடவில்லை, காவல்துறையினரிடம் அனுமதி பெற்று எங்கள் கட்சியினர் உணவு சாப்பிட்டார்கள்" என்று நவாஸ்கனி மறுக்க, அந்த பிரச்னையும் தற்போது பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இதுகுறித்து சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வர மமக எம்.எல்.ஏ அப்துல் சமது மனு கொடுத்தார்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசு தரப்பில் எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்காததால் தொடர்ந்து பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது திருப்பரங்குன்றம் மலை சர்ச்சை.

இது தொடர்பாக மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நடந்து வரும் சம்பவங்களை பார்ப்போம்..

**டிசம்பர் 25 :** திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள சிக்கந்தர் தர்ஹாவுக்கு கந்தூரி கொடுக்க ஆடு சேவலுடன் வந்த ராஜபாளையத்தை சேர்ந்த செய்யது அபுதாஹிர் குடும்பத்தினர் மலை அடிவாரத்தில் காவல்துறையினரால் தடுக்கப்பட்டனர். உடனே அவர்கள் அப்பகுதி இஸ்லாமியர்களுடன் சேர்ந்து மலை படிக்கட்டுகளில் அமர்ந்து போராட்டம் நடத்த அதிகாரிகள் சமாதானப்படுத்தினர்.

**ஜனவரி 5 :** வழிபாட்டு உரிமை தடுக்கப்படுவதாக திருப்பரங்குன்றம் பெரிய ரத வீதியில் எஸ்.டி.பி.ஐ கட்சியுடன் ஜமாத் நிர்வாகிகள் இணைந்து நடத்திய போராட்டத்தில் கலந்துகொண்ட 450 பேர் கைது செயப்பட்டார்கள். இது மதக்கலவரத்தை ஏற்படுத்தும் செயல் என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையும் கண்டித்தார்.

**ஜனவரி 12 :** கந்தர் மலையை சிக்கந்தர் மலையாக்க முயற்சிக்கிறார்கள். இதை தடுக்க வேண்டும், சைவ மலையின் புனிதத்தை கொடுக்கிறார்கள், இதை தடுத்தும், சமணப்படுகைகள் நிறைந்த மலை முழுவதையும் தொல்லியல் துறை கட்டுபாட்டில் கொண்டு வரவும் அரசு உத்தரவிட வேண்டும் என்று இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட அமைப்புகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தியது மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

**ஜனவரி 18 :** ஆடு கோழியுடன் கந்துரி விழா நடத்தி விருந்து விழா நடத்தபோவதாக அறிவித்ததால் மலையேறும் பகுதியில்



காவல்துறையினர் குவிக்கபட்டு தடுக்கப்பட்டு, தர்ஹாவில் பிரார்த்தனை செய்ய செல்பவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

அதே நாளில் இந்து முன்னணி தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணி திருப்பரங்குன்றம் வந்து ஆலோசனைக் கூட்டம் நடத்தி வேல் ஏந்தி முருகன் கோயிலுக்கு ஊர்வலம் சென்று வழிபட்டார். அப்போது பேசியவர், "30 ஆண்டுகளாக மலை மீதுள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற கோரிக்கை வைக்கபட்டும், நீதிமன்றம் உத்தரவிட்டும் அரசு அதை நிறைவேற்றவில்லை. திமுக, அதிமுக கட்சிகள் இந்துக்களுக்கு எதிராக உள்ளது. இங்கு ஆடு வெட்ட அனுமதிக்க கூடாது. புனிதமான திருப்பரங்குன்றம் மலையை காப்பாற்ற அனைத்து இந்து மக்களையும் இணைத்து தொடர் போராட்டம் நடத்துவோம்" என்றார்.



**ஜனவரி 19 :** தடையை மீறி ஊர்வலம், போராட்டம் நடத்திய இஸ்லாமிய அமைப்புகள் மீதும், இந்து முன்னணியினர் மீதும் காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

**ஜனவரி 20 :** மனித நேய மக்கள் கட்சி மாநில பொதுச்செயலாளரும் மணப்பாறை எம்.எல்.ஏவுமான அப்துல் சமது கட்சியினருடன் வந்து திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தர்ஹாவை பார்வையிட்டார். " பல காலமாக இந்த தர்ஹா இந்துக்களும் இஸ்லாமியர்களும் வழிபடக்கூடிய இடமாக இருந்து வருகிறது. நேர்த்திக் கடனாக ஆடு, கோழி சமைத்து அனைவருக்கும் வழங்கும் நடைமுறை இங்கு இருந்து வருகிறது. அரசியல் ஆதாயத்துக்காக சிலர் இதை சர்ச்சையாக்குகிறார்கள். இது சிக்கந்தர் மலை என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெறபட்டுள்ளது. வட மாநிலத்தைப் போல தமிழகத்தை மாற்ற சிலர் முயற்சி செய்கிறார்கள். தர்ஹாவுக்கு வருகின்றவர்களை சோதனை என்ற பெயரில் துன்புறுத்தக் கூடாது. 1920 களின் இந்த தர்ஹா குறித்து வந்த நீதிமன்ற தீர்ப்புகள் எங்களிடம் உள்ளது" என்றார்.

**ஜனவரி 22 :** வஃபு வாரியத் தலைவரும் ராமநாதபுரம் எம்பியுமான நவாஸ்கனி திருப்பரங்குன்றம் வந்து ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையில், "நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக மலைமீது தர்ஹாவும், காசி விசுவநாதர் கோயில் உள்ளது. அரசிதழில் தெரிவித்துள்ளபடி தர்ஹா அமைந்துள்ள 50 சென்ட் நிலம் வஃபு வாரியத்திற்கு உட்பட்டது. அதனால் தேவையற்ற அசவுகரியத்தை ஏற்படுத்தாமல் தீர்வு காண மதுரை கலெக்டர், போலீஸ் கமிஷனரை சந்தித்து கோரிக்கைகளை வைத்தேன். சமைத்த அசைவ உணவை மலை மீது கொண்டு செல்லத் தடையில்லை என்று கூறியதால் மக்கள் சமைத்த உணவை கொண்டு சென்றனர்" என்று தெரிவித்திருந்தார்.

**ஜனவரி 23 :** திருப்பரங்குன்றம் மலை மீது நவாஸ்கனி எம்பியுடன் சென்றவர்கள் அசைவ உணவு சாப்பிட்டுள்ளார்கள் என்று மத்திய அமைச்சர் முருகன் கண்டனம் தெரிவித்திருந்தார். திருப்பரங்குன்றம் மலை மீது அசைவ உணவு உண்டதன் மூலம் நவாஸ்கனி மதக்கலவரத்தை ஏற்படுத்தும் செயலை செய்துள்ளார் என்று பாஜக தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்ட, "நான் அங்கு அசைவ உணவு சாப்பிடவில்லை. அதை அண்ணாமலை நிரூபித்தால் பதவி விலககிறேன்'' என்று நவாஸ்கனி மறுத்தார்.

**ஜனவரி 23 :** திருப்பரங்குன்றம் வந்த ஹெச்.ராஜா, "திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று கூறிக்கொண்டு இங்கு வந்த நவாஸ்கனி மீது வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும்" என்றார்.

**ஜனவரி 24 :** திருப்பரங்குன்றம் வந்த சட்டமன்ற பாஜக தலைவர் நயினார், நவாஸ்கனி எம்பியும், அப்துல் சமது எம்.எல்.ஏவும் இங்கு வந்திருக்க கூடாது, அவர்கள் வந்ததால்தான் நான் இப்போது வந்தேன். திருப்பரங்குன்றம் மலையில் இதுவரை என்ன இருந்ததோ அதை அப்படியே நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றார்.

நவாஸ்கனியை கடுமையாக பேசி திருப்பரங்குன்றத்திற்கு இரண்டு முறை செல்ல முயன்ற வேலூர் இப்ராகிம் கைது செய்யப்பட்டார். அவர் மீது நடவடிக்கை எடுக்க மதுரை மாவட்ட ஐக்கிய ஜமாத் காவல்துறையில் புகார் கொடுத்துள்ளது.

இதற்கிடையே திருப்பரங்குன்றத்தை பாதுகாக்க வருகின்ற பிப்ரவரி 4 ஆம் தேதி மிகப்பெரும் போராட்டத்தை இந்து முன்னணி அறிவித்துள்ளது.

இந்த நிலையில் பழனியில் செய்தியாளர்களிடம் பேசிய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, "நீதிமன்ற உத்தரவுகளை ஆய்வு செய்து திருப்பரங்குன்றம் பிரச்னையை அரசு நடுநிலையோடு அணுகுகிறது." என்று தெரிவித்துள்ளார்.

திருப்பரங்குன்றம் தர்ஹா பிரச்சனையில் அரசு இறுதியான அறிவிப்பை இதுவரையில் அறிவிக்காததால் இந்து இயக்கங்களும், இஸ்லாமிய அமைப்பினரும் மாறி மாறி குற்றம்சாட்டி, பதற்றத்தை அதிகரித்த வண்ணம் உள்ளனர் என வேதனை தெரிவிக்கிறார்கள் அப்பகுதி மக்கள்.!



# நகைச்சுவை மன்னன் சார்லி சாப்ளின் கூறிய 25 தத்துவங்கள்

1 இந்த உலகில் எதுவும் நிரந்தரமில்லை, உங்கள் பிரச்சினைகள் உட்பட.

2 சிரிக்கத் தவறும் ஒவ்வொரு நாளும் பயனற்றது.

3 சிரிப்புதான் வலிக்கு மருந்து! சிரிப்புதான் வலிக்கு நிவாரணம், சிரிப்புதான் உன் வலியை தீர்த்துவைக்கும்.

4 கனவுகள் எல்லாம் நனவாகும். நிறைய காயங்களுக்குப் பிறகு.

5 உன் மனம் வலிக்கும் போது சிரி. பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை!

6 இதயம் வலித்தாலும் சிரி. அது உடைந்தாலும் சிரி.

7 என் வலி சிலருக்கு சிரிப்பைத் தரலாம். ஆனால், நிச்சயம் என் சிரிப்பு யாருக்கும் வலியைத் தராது.

8 எனக்கு நிறைய பிரச்சினைகள் உண்டு, ஆனால் என் உதட்டுக்கு அதெல்லாம் தெரியாது. அது சிரித்துக்கொண்டுதான் இருக்கும்.

9 பணம் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கலாம். ஆனால் வறுமை நம்மிடம் இருந்து பறித்த சிலவற்றை பணத்தால் திருப்பி தர முடியாது.

10 கண்ணாடி என் நண்பன் ஏனென்றால், நான் அழும்போது அது சிரிப்பதில்லை.

11 ஆசைப்படுவதை மறந்து விடு. ஆனால், ஆசைப்பட்டதை மறந்து விடாதே.

12 உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.

13 போலிக்கு தான் பரிசும் பாராட்டும். உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே.

14 எப்போதும் மழையில் நனைந்தபடியே நடக்கப் பிடிக்கிறது. என் கண்களில் கண்ணீரை யாரும் பார்க்க முடியாது என்பதால்.

15 நீ எப்போதும் வானவில்லைக் காண முடியாது உன் பார்வை கீழ் நோக்கியே இருந்தால்!

16 நண்பர்களின் சிரிப்பைப் பார்க்கும் போது கண்ணீரை மறக்கிறேன், நண்பர்களின் கண்ணீரைப் பார்க்கும்போது சிரிப்பை மறக்கிறேன்.

17 வாழ்க்கை அர்த்தம் தேடிக்கொண்டிருப்பதற்கல்ல, அனுபவிப்பதற்கு.

18 நீ மகிழ்ச்சியாய் இல்லாத போது வாழ்க்கை உன்னைப் பார்த்து சிரிக்கிறது. நீ மகிழ்ச்சியாய் இருக்கும்போது உன்னைப் பார்த்து புன்னகை செய்கிறது. ஆனால், நீ அடுத்தவரை மகிழ்ச்சிப்படுத்தும்போது வாழ்க்கை உன்னை வணங்குகிறது.

19 உங்களை தனியாக விட்டாலே போதும் வாழ்க்கை அழகானதாகத்தான் இருக்கும்.

20 புன்னகைத்துப் பாருங்கள் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும்!

21 விவாதங்கள், மோதல்கள் அல்லது பிரச்சினைகளைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. வானமே இடிந்தாலும் அதிலிருந்து புதிய உலகம் பிறக்கும். வாழ்க்கை இப்படித்தான்.

22 ஒரு முறையாவது உங்களைப் பற்றி முழுமையாகச் சிந்தித்துப் பாருங்கள். வாழ்க்கையின் மிகச்சிறந்த நகைச்சுவையைத் தவறவிட்டுவிடுவீர்கள்.


23 நண்பனுக்கு உதவுவது சுலபமானதுதான். ஆனால், உங்கள் நேரத்தை அவனுக்காக கொடுக்கும் வாய்ப்பு மிகவும் அரிதானது.

24 அதிகமா சிந்திக்கிறோம். மிகக் குறைவாகவே உணர்கிறோம்.

25 கெடுதல் செய்யத்தான் அதிகாரம் தேவைப்படும். மற்றபடி அன்பிருந்தால் எதையும் சாதிக்கலாம்

# 8 இபிஎஸ் முதல்வராக பின்பற்ற வேண்டிய கட்டளைகள்!

சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என அனைத்துத் தேர்தல்களிலும் தோல்வியை மட்டுமே பெற்றுவரும் அ.தி.மு.கவின் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள் சென்னையில் நாளை நடைபெறவிருக்கின்றன. அ.தி.மு.கவின் வாக்கு வங்கி 20 சதவிகிதமாக சரிந்துவிட்ட நிலையில், அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்ட சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைவரையும் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்படுகிறது.



இந்தச் சூழலில், அ.இ.அ.தி.மு.கவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னை வானகரத்திலுள்ள ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் அ.தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. அதில் என்ன மாதிரியான பிரச்னைகளை விவாதிக்கப்போகிறார்கள், என்னென்ன தீர்மானங்களை நிறைவேற்றப்போகிறார்கள் என்பது குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன. இந்த நிலையில், அ.தி.மு.க ஒரு வலுவான கட்சியாக மீண்டும் உருவெடுக்க வேண்டுமென்றால், 2026ல் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அ.தி.மு.க வெற்றிபெற வேண்டுமென்றால், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.கவுக்குள் என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும், என்ன மாதிரியான உத்திகளைக் கையாள வேண்டும், அணுகுமுறைகளை மாற்ற வேண்டும் என்பது குறித்து மறைந்த குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் ஆலோசகரும், அரசியல் திறனாய்வாளருமான வெ.பொன்ராஜ் 8 ஆலோசனைகளை தெரிவித்துள்ளார்.









### 1. வலுவான கூட்டணி

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் தொடங்குவதற்கு முன்பு பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும், இரண்டாம் கட்டத் தலைவர்களாக இருக்கும் முன்னாள் அமைச்சர்களும் சில விஷயங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, தமிழகத்தின் இன்றைய களச்சூழலில், தி.மு.க தலைமையிலான 'இந்தியா' கூட்டணி மிகவும் வலுவாக இருக்கிறது. தி.மு.க அரசுக்கு எதிராக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் போராட்டங்கள் நடத்தினாலும், விமர்சனங்களை முன்வைத்தாலும், இந்தக் கட்சிகள் தி.மு.க கூட்டணியைவிட்டு வெளியேற வாய்ப்பே இல்லை.

எனவே, 2026ல் தி.மு.க கூட்டணி 40 சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற அதிக வாய்ப்பு இருக்கிறது. அவ்வளவு பலமாக இருக்கும் தி.மு.க கூட்டணிக்கு ஒரு வலுவான போட்டியைக் கொடுக்க வேண்டுமென்றால், அதே போன்ற இன்னொரு கூட்டணியை எதிர்க்கட்சிகள் கட்டமைக்கப்பட வேண்டும். அதற்கான சக்தி அ.தி.மு.க வுக்குத்தான் இருக்கிறது.

### 2. தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு!

அ.தி.மு.கவின் கீழ்மட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோரின் மனநிலையையும், கள நிலவரங்களையும் எடப்பாடி பழனிசாமியும், முன்னாள் அமைச்சர்களும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், கள ஆய்வின்போது நிர்வாகிகள் ஏன் கோபப்படுகிறார்கள், ஏன் கொதித்தெழுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அவர்கள் பக்கம் இருக்கும் நியாயங்களையும் உள்வாங்கிக்கொள்ள முடியும்.

கள ஆய்வின்போது, பூத் கமிட்டியைப் போட்டுவிட்டீர்களா, கிளை அமைத்துவிட்டீர்களா என்றெல்லாம் கேட்டுவிட்டு, 'கூட்டணி அமைப்பதை நாங்கள் பார்த்துக்கொள்வோம்' என்று கிளம்பிப்போனால், ஒரு பயனும் இருக்காது. கழகத்தின் கிளைச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், ஒன்றியச் செயலாளர்கள், பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து, அவற்றின் அடிப்படையில் கட்சியைச் சீரமைக்க வேண்டும். இதுதான் கள ஆய்வின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

### 3. இழப்புகளைச் சரிசெய்ய வேண்டும்!

ஓ.பி.எஸ்., இ.பி.எஸ் ஆகிய இருவரும் ஒன்றாக இருந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்ற காலத்தில், 33 சதவிகித வாக்குகளை அ.தி.மு.க பெற்றது. இன்றைக்கு ஓ.பி.எஸ் இல்லை, டி.டி.வி.தினகரன் இல்லை, சசிகலா இல்லை. அவர்கள் இருந்திருந்தால், 30 சதவிகித வாக்குகளை அ.தி.மு.க தக்கவைத்திருக்கும். அதன் காரணமாக, ஒரு வலுவான கட்சியாக அ.தி.மு.க இன்றைக்கும் இருந்திருக்கும்.

**ஓ.பி.எஸ்., சசிகலா, டி.டி.வி.தினகரன் ஆகியோர் சார்ந்த சமுதாயத்தின் மக்களுடைய ஆதரவை அ.தி.மு.க மீண்டும் பெற வேண்டும்.** தென் மாவட்டங்களில் பெரும்பான்மையாக இருக்கும் அந்த சமூகத்தினர், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இடஒதுக்கீடு அளித்ததன் மூலம் எடப்பாடி பழனிசாமி தங்களுக்கு துரோகம் செய்துவிட்டார் என்று நினைக்கிறார்கள். ஏனெனில், 10.5 சதவிகித இடஒதுக்கீடு காரணமாக 116 சமுதாயங்களின் அதிருப்தியை எடப்பாடி பழனிசாமி சம்பாதித்தார். அது 2021 சட்டமன்றத் தேர்தலிலும், 2024 மக்களவைத் தேர்தலிலும் அவருக்கு மிகப்பெரிய அடியைக் கொடுத்தது. அந்த இழப்புகளைச் சரிசெய்தாலே, அ.தி.மு.கவின் வாக்கு வங்கி 30 சதவிகிதமாக அதிகரித்துவிடும்.

### 4. சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்!

அ.தி.மு.கவைச் சுற்றி சூழ்ச்சி வலைகள் பின்னப்படுகின்றன. அ.தி.மு.கவிடம் எஞ்சியிருக்கும் 20 சதவிகித வாக்குகளையும் உடைத்தெறிவதற்கான 'அசைன்மென்ட்' சிலருக்கு தரப்பட்டிருக்கிறது. அவர்கள் அ.தி.மு.கவை மத ரீதியாகவும், சாதி ரீதியாகவும் உடைப்பதற்கான உத்திகளை வகுத்துவருகிறார்கள். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், அ.தி.மு.கவை

ஆதரிக்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களை பா.ஜ.கவுக்கு இழுப்பது, அல்லது நாம் தமிழர் கட்சியை நோக்கித் திருப்புவது என்று மடைமாற்றம் செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ் பின்புலம் கொண்டவர்கள்தான் இதைச் செய்துவருகிறார்கள்.

அ.தி.மு.கவை மூன்றாம் இடத்துக்குத் தள்ளிவிட வேண்டும் என்பது அவர்களின் திட்டம். அ.தி..முகவை மூன்றாம் இடத்துக்குத் தள்ளிவிட்டால், அ.தி.மு.க வாக்கு வங்கியை மேலும் சிதைந்துவிடும். இரண்டாம் இடத்துக்கு பா.ஜ.கவைக் கொண்டுவந்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். இது எடப்பாடி பழனிசாமிக்கு புரிந்திருக்கிறதா என்று தெரியவில்லை. இதைப் புரிந்துகொண்டு அந்த சதி வேலைகளை உடைப்பதற்கான வேலைகளை உடனே அவர் மேற்கொள்ள வேண்டும்.



## 5. சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கை!

தமிழ்நாட்டில் மொத்த சிறுபான்மை வாக்குகளில் சுமார் 50 சதவிகிதம் அ.தி.மு.கவிடம் இருந்தது. அந்த வாக்குகள் இன்றைக்கு தி.மு.கவுக்குப் போய்விட்டன. பா.ஜ.க கூட்டணியில் இருந்ததால், அ.தி.மு.கவை சிறுபான்மை மக்கள் கைவிட்டுவிட்டார்கள். பா.ஜ.கவுக்கு கூட்டணி கதவுகளை எடப்பாடி பழனிசாமி மூடிவிட்டார் என்றாலும், அ.தி.மு.க மீது சிறுபான்மை மக்களுக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லை.

ஏனெனில், 'தாய் உறவு, குட்டி பகை' என்பதைபோல, டெல்லியில் பிரதமர் மோடியுடனும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடனும் அ.தி.மு.க உறவு பாராட்டுகிறது. அதே நேரம், தமிழ்நாட்டில் அண்ணாமலையை பகையாகப் பார்க்கிறது. இப்படி இருந்தால் அ.தி.மு.க வை தமிழக மக்கள் நம்ப மாட்டார்கள். எனவே, பா.ஜ.க மீதான எதிர்ப்பில் அ.தி.மு.க உறுதியாக இருக்கிறது என்பதை எடப்பாடி பழனிசாமி வெளிப்படுத்த வேண்டும். மத்திய அரசின் தவறான கொள்கைகளை வலுவாக எதிர்ப்பதற்கு அவர் முன்வர வேண்டும். அப்போதுதான், சிறுபான்மை மக்கள் அ.தி.மு.கவை நம்புவார்கள்.

## 6. அதிகார தொனி அறவே கூடாது!

எடப்பாடி பழனிசாமியின் அணுகுமுறையில் அதிகார தொனி அதீதமாக இருக்கிறது. 'நீக்கப்பட்டவர்கள் நீக்கப்பட்டவர்கள்தான். யாரையும் சேர்க்க மாட்டேன்' என்றெல்லாம் கர்ஜிக்கிறார். இத்தகைய அணுகுமுறை அவருக்கும், கட்சிக்கும் நல்லதல்ல. இதை பொதுமக்கள் ரசிக்க மாட்டார்கள். கட்சித் தொண்டர்களும் விரும்ப மாட்டார்கள். இத்தகைய அணுகுமுறையை வைத்துக்கொண்டு, இழந்த 10 சதவிகித வாக்குகளை அவரால் மீண்டும் கொண்டுவர முடியாது. எனவே, இந்த விஷயத்தில் எடப்பாடி பழனிசாமி தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்.

## 7. அடுத்த முதல்வர் வேட்பாளர், பொதுச்செயலாளர்?

'நான்தான் அ.தி.மு.கவின் பொதுச்செயலாளர். 2026ல் நான் தான் முதல்வர் வேட்பாளர். இதை ஏற்றுக்கொண்டு அ.தி.மு.கவுக்கு யாரெல்லாம் வர விரும்புகிறார்களோ, அவர்கள் அனைவரையும் வரவேற்கிறோம்' என்று எடப்பாடி பழனிசாமி அறிவிக்க வேண்டும். இது தொடர்பான தீர்மானத்தை அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டும்.

இப்படி ஒரு பாசிட்டிவ் சிக்னல் கொடுத்தால், ஓ.பி.எஸ்., சசிகலா உட்படப் பலரும் வந்துவிடுவார்கள். அவர்கள் வந்துவிட்டால், அவர்களின் சமூகம் சார்ந்த வாக்குகளும் அ.தி.மு.கவுக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பா.ஜ.க கூட்டணியிலிருக்கும் டி.டி.வி.தினகரனுக்கு என்ன மாதிரியான அழுத்தங்கள் இருக்கின்றன. அவர் அ.தி.மு.கவுக்குத் திரும்புவாரா என்பது தெரியவில்லை. ஆனால், ஓ.பி.எஸ்., சசிகலா இருவரும் நிச்சயமாக வந்துவிடுவார்கள். இது அ.தி.மு.க தொண்டர்களுக்கு ஒருவித நம்பிக்கையை ஏற்படுத்தும். இப்படியொரு நிலை ஏற்பட்டால், அ.தி.மு.க தலைமையில் ஒரு வலுவான கூட்டணியை அமைக்கும் வகையில், பல கட்சிகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

## 8. எம்.ஜி.ஆர் உயில் படி பதவி!

அ.தி.மு.க பொதுச்செயலாளர் பதவிக்காலம் இந்த முறை முடிந்த பிறகு, எம்.ஜி.ஆர் உயிலில் என்ன எழுதினாரோ, அந்த முறைப்படி புதிய பொதுச்செயலாளர் தேர்வுசெய்யப்படுவார் என்ற தீர்மானத்தையும் பொதுக்குழுவில் நிறைவேற்ற வேண்டும். அதில், '2016 ம் ஆண்டு யாரெல்லாம் அ.தி.மு.க உறுப்பினர்களாக இருந்தார்களோ, அவர்களெல்லாம் பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியிடலாம். இந்த நிலைதான் எதிர்காலத்தில் தொடரும்' என்று தீர்மானம் இருக்க வேண்டும்.

இதை எல்லாம் செய்தால் அ.தி.மு.க தொண்டர்கள் மத்தியில் மிகப்பெரிய அளவுக்கு நம்பிக்கை பிறந்துவிடும். அதன் பிறகு, தேர்தலில் எப்படி வெற்றிபெறுவது, பொதுமக்களின் வாக்குகளை எப்படிக் கொண்டுவருவது, சிறுபான்மையினர் வாக்குகளை எப்படிக் கவர்வது, தலித் மக்களின் நம்பிக்கையை எப்படிப் பெறுவது போன்றவைக் குறித்து யோசிக்கலாம். இவற்றை செய்தாலே அ.தி.மு.கவுக்கு வெற்றிவாய்ப்பு கிடைக்கும்!

இதை செய்வாரா எடப்பாடி பழனிசாமி

# கனடாவில் பிரதமர் பதவிக்கான போட்டியில் இந்தியர்!

## மகுடம் சூடுவாரா?



**இந்தியாவின் கர்நாடகாவை பூர்விகமாக கொண்ட சந்திரா ஆர்யா கனடா பிரதமர் போட்டியில் களமிறங்கியுள்ளார். லிபரல் கட்சி சார்பில் போட்டி யிடுவதற்காக அதிகாரப்பூர்வமாக விண்ணப்பித்துள்ளார் சந்திரன் ஆர்யா. இதன் பின் கனடா நாடாளுமன்றத்தில் தனது தாய் மொழியான கன்னடத்தில் உணர்ச்சி மிகு உரை ஒன்றையும் ஆற்றினார் ஆர்யன் சந்திரா. பிரபல எழுத்தாளர் கூவேம்பு, நடிகர் ராஜ்குமார் பெயரையும் அப்போது மேற்கோள் காட்டி பேசினார்.**



ஒட்டவா மாகாணத்தில் நெப்பியான் என்ற தொகுதியில் மக்கள் பிரதிநிதியாக உள்ளார் இவர். உலகின் முக்கிய பதவிகளில் ஒன்றுக்கு தன் மகன் போட்டியிடுவார் என்பதை கனவில் கூட நினைத்துப்பார்க்கவில்லை என்கிறார் சந்திரன் ஆர்யாவின் தந்தை கோவிந்தையா.

கனடா நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளி உறுப்பினர்கள் பலர் இருந்த போதும் குறுகிய காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை பெற்றுள்ளார் சந்திரன் ஆர்யா. இந்தியாவுடனான கனடா நாட்டின் உறவுகள் உரசல் மிக்கதாக உள்ள நிலையில் இந்திய வம்சாவளியினர் ஒருவரே அந்நாட்டின் அதிபர் பதவியை நெருங்குவது வியப்புக்குரிய ஒன்று.

கனடாவில் இந்தியர்கள் மக்கள் தொகை கணிசமாக உள்ளது சந்திரனுக்கு சாதகமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. தமிழகத்தை பூர்விகமாக கொண்ட கனடாவின் போக்குவரத்துத்துறை அமைச்சர் அனிதா ஆனந்தும் பிரதமர் பதவிக்கு போட்டியிட முடிவு செய்து பின்னர் பின்வாங்கிவிட்டார். பிரதமர் என்ற உயர் பதவிக்கான போட்டியில் வெற்றி தோல்வி என்பதை விட அந்த உயர் பதவிக்கு போட்டியிடுமளவுக்கு இந்தியர்கள் உயர்ந்துள்ளதை எதேச்சையான நிகழ்வாக பார்க்க முடியாது. இதை அவர்களின் உழைப்புக்கும் உண்மைத்தன்மைக்கும் கிடைத்த, கிடைக்கும் பரிசாகவே பார்க்கவேண்டியுள்ளது.

உலகெங்கும் 15 நாடுகளில் அமைச்சர்கள் அல்லது பிரதமர்கள் அல்லது அதிபர்கள் என்ற உயர்ந்த நிலையில் சுமார் 200 இந்திய வம்சாவளியினர் உள்ளதாக கூறுகிறது 3 ஆண்டுகளுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு. ஒரு காலத்தில் காலனி நாடாக இந்தியா இன்று பல நாடுகளுக்கு தலைவர்களை தந்து வருவதை காலத்தின் அழகிய முரணாகவே பார்க்க வேண்டியுள்ளது.



## வீட்டில் பிரசவம் பார்ப்பது

# சட்டப்படி குற்றமா? தனி மனித சுதந்திரமா?

**கோவையில் யூடியூப் பார்த்து பெண் ஒருவருக்கு அவரது கணவரும், கணவரின் நண்பரும் பிரசவம் பார்த்த நிலையில் அந்த பெண் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் ஒட்டுமொத்த மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மற்றொரு புறம் தேனியில் பொறியியல் பட்டதாரியான கண்ணன் என்பவர் தன் மனைவிக்கு வீட்டிலேயே பிரசவம் பார்த்தார். தாயும் குழந்தையும் நலமாக உள்ளனர். தடுப்பு ஊசி உட்பட ஆங்கில மருத்துவத்தின் எந்த சிகிச்சையையும் குழந்தைக்கு மேற்கொள்ள தந்தை கண்ணன் மறுத்துள்ளார். இந்த விஷயங்கள் மக்கள் மத்தியில் பல்வேறு விவாதங்களை ஏற்படுத்தி உள்ளது. தனியார் மருத்துவமனைக்கு போனால் நிச்சயம் சிசேரியன் தான் என்பது எழுதப்படாத விதியாக இருக்கும் இந்த காலத்தில் வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது பாதுகாப்பானதா? அல்லது சட்டப்படி குற்றமா? வீட்டில் பிரசவம் பார்த்தால் தண்டனை உறுதி என அரசு மிரட்டுகிறதே? இது தனிமனித உரிமை மீறலா? என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பி இருக்கிறது. இது குறித்து மருத்துவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை பார்ப்போம்...**

அந்த காலத்தில் எல்லாம் வீட்டில்தான் பிரசவம் பார்க்கப்பட்டது. பிரசவம் என்பது பெண்களுக்கு மறுஜென்மம் போன்றது. 2 உயிர் சம்மந்தப்பட்ட விஷயம். பிரசவத்தின் போது, யாருக்கு அதிக ரத்த போக்கு ஏற்படும் என்பதை கணிக்கவே முடியாது. அதற்கு ஏற்றாற்போல மருத்துவமனைகளில் ரத்தம் தயாராக வைக்கப்பட்டிருக் கும். வீட்டில் இதெல்லாம் யார் செய்வார்கள்.

நவீன மருத்துவம் இல்லாத அந்த காலத்தில் 'மருத்துவச்சி' வந்து வீட்டில் பிரசவம் பார்த்து வந்தார். மருத்துவச்சி என்றால் படிப்பறிவில்லாத மருத்துவர் என்று சொல்லலாம். சரியாக பிரசவம் நடைபெற்றால் சிசு உயிர் பிழைக்கும். இல்லையென்றால் உயிரிழப்பு ஏற்படும். அதனால்தான் பிரசவத்தை பெண்களுக்கு மறுஜென்மம் என்று கூறுகின்றனர்.

பிரசவம் என்றாலே அதற்கு ஒரு லட்சம் ரூபாய் வரை செலவு ஆகிறது. இதற்கு பயந்து வீட்டிலே பிரசவம் பார்க்கப்பது மிகவும் தவறானது. அரசு மருத்துவமனைகளில் செலவில்லாமல் அல்லது குறைந்த செலவில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். பிரசவித்தலின் போது மருத்துவமனையை அணுகுவதே சரியானது. மருத்துவமனையில் ஆகும் செலவை பார்த்தால், உயிர் போனால் பரவாயில்லையா?

சுகப்பிரசவம் ஆக வேண்டும் என பெண்கள் நினைத்தால் அதற்கு கர்ப்பமானதில் இருந்து நிறைய பயிற்சிகளை எடுத்து வரலாம். காலை எழுந்தவுடன் நல்ல சூழலில் பிராணாயாமா, அதாவது மூச்சுப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். மொட்டை மாடியிலோ, வீட்டுத் தோட்டத்திலோ அதிகாவையில் சுத்தமான காற்றை சுவாசிக்கலாம்.

தரையில் அமர்ந்து காய்கறிகள் நறுக்குவது, தரையில் அமர்ந்து உண்ணுவது போன்ற பழக்கங்களை பின்பற்ற வேண்டும். கீழே அமர்ந்து எழுந்தால்தான் இடுப்பு எலும்புகள் இடையில் உள்ள ஜவ்வுப்பகுதி விரிவடைந்து பிரசவத்தின்போது, குழந்தையின் தலை எளிதாக வெளிவர உதவும்.

தற்போதைய காலகட்டத்தில் டைனிங் டேபிளில் அமர்ந்து உண்ணுவது, மேடையில் வைத்து நின்று கொண்டே காய்கறி நறுக்குவது என்று அனைத்தும் மாறிவிட்டன. அதனாலேயே பலருக்கும் பிரசவத்தின்போது அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

நல்ல இயற்கை உணவுகளை உட்கொள்ள வேண்டும். தினமும் ஒரு கீரை வகையையாவது எடுத்துக் கொள்வது அவசியம். முளைக்கீரை, அரக்கீரை போன்று அவரவர் உடலுக்கு ஏற்ற ஏதேனும் ஒரு கீரை வகையை உட்கொள்ளலாம்.

அதேபோல தினமும் பழம் எடுத்துக் கொள்வதை பழகிக் கொள்ள வேண்டும். ஆப்பிள், திராட்சை மற்றும் வாழைப்பழங்களை தினமும் எடுத்துக் கொள்ளலாம். பாதாம், வால்நட் போன்ற பருப்பு வகைகளையும் எடுத்துக் கொள்ளலாம். மேலும்,மன அழுத்தம் இல்லாமல் இருப்பது, யோகா செய்வது, நிம்மதியான தூங்குவது அவசியம். ஆனால், இவையெல்லாம் செய்தாலும் சில சமயங்களில் பிரசவத்தின்போது சில சிக்கல் ஏற்பட்டால் அறுவை சிகிச்சை மூலமாக குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது.

**இன்று அதிகளவில் சிசேரியன் மூலமாகவே குழந்தை பிறக்கிறது. காரணம் என்ன?**

இன்று நம் வாழ்க்கைமுறை பெரிதும் மாறிவிட்டது. சரியான நேரத்தில் தூங்குவதில்லை, ஜங்க் உணவு உண்ணுவது, போதிய உடற்பயிற்சி இல்லாதது, மன அழுத்தம் என்று நம் வாழ்க்கை மாறிவிட்டது. இது ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது.

மேலும், கேட்க அதிர்ச்சியாக இருந்தாலும், சில பெண்கள் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். சுகப்பிரசவத்தினால் ஏற்படக்கூடிய வலியை நினைத்து அஞ்சும் இத்தலைமுறையினர், சிசரியன் வேண்டும் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் ஜாதகம், ஜோசியத்தின் மீது அதிக நம்பிக்கையால் இந்த நட்சத்திரத்தில் இந்த நேரத்தில் இந்த நிமிடத்தில் சிசேரியன் செய்து குழந்தையை எடுங்கள் என்று கூறுபவர்களும் அதிகம்.

சில தசாப்தங்களுக்கு முன்னால் வீட்டில் பிரசவம் பார்க்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் அப்போது தாய் சேய் இறப்பு விகிதம் மிகவும் அதிகமாக இருந்தது. தற்போது அது பெரியளவில் குறைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் பிரசவம் பார்க்கும் போது நோய் தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. அந்த காலத்தில் இருந்தது போல தற்போது ஏதுமில்லை. எல்லாமே மாறியுள்ளது. எனவே தற்போதுள்ள சூழலில் மருத்துவமனையில் பிரசவம் பார்ப்பதே நல்லது யூ டியூபிற்கு சென்று பார்த்தால், வெளிநாடுகளில் வீட்டிலேயே பெண்கள் பிரசவிக்கும் பல வீடியோக்கள் கொட்டிக் கிடக்கின்றன. தண்ணீருக்கு அடியில் குழந்தை பெற்றுக் கொள்வது, கணவர் மட்டுமே உடன் இருந்து மனைவி குழந்தை பெற்றுக் கொள்வது என்று பல வீடியோக்கள் உள்ளன. ஆனால், அவையெல்லாம் இங்கு எந்த அளவிற்கு பாதுகாப்பாக இருக்கும் என்பது ஒரு கேள்விக்குறியே. இவ்வாறு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சித்த மருத்துவர்களிடம் கேட்ட போது, "மருத்துவம் அறிவியலைச் சார்ந்து இருக்க வேண்டும். பிரசவம் என்பது கவனமாக பார்க்கக்கூடியது. இதனை விளையாட்டாக பார்க்கின்றனர். முழுமையான அறிவியலைத் தெரிந்தவர்களால் மட்டுமே பிரசவம் பார்க்க முடியும். அந்த காலத்தில் பிரசவத்தின் போது சிசு மரணங்கள் அதிகமாக இருந்தன. ஆனால், தற்போது சிசு மரணங்கள் குறைவாக உள்ளது. பிரசவத்தில் நிறைய விஷயங்கள் உள்ளது.

சித்த மருத்துவம் படிக்கும் நாங்களே பிரசவம் பார்ப்பதில்லை. தேவையான வழிகளை மட்டுமே காட்டுகிறோம். மருத்து வரின் ஆலோசனையின்படி இயற்கை பிரசவம் நிகழ வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால், இவர்கள் என்ன படித்தார்கள். என்ன அனுபவம் இருக்கிறது. எதை வைத்து வீட்டில்




சுகப்பிரசவத்துக்கு பயிற்சி அளிக்கின்றனர்.

இதுபோன்ற நபர்களைக் கைது செய்தது தவறில்லை. உடனடியாக சித்தா, ஆயுர்வேதா உள்ளிட்ட மாற்று மருத்துவத்தை அரசு முடக்க நினைக்கிறது என்று சிலர் பரப்பி வருகின்றனர். இது முற்றிலும் தவறானது. சித்தா டாக்டரை கைது செய்யவில்லை. மக்களை ஏமாற்றும் நபர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்'' என்றனர்.

சட்டப்படி பார்த்தால், வீட்டில் பிரசவம் பார்ப்பது குற்றமான செயலாக கருதப்படவில்லை. பிறப்பு பதிவு செய்யும் படிவத்தில் பிரசவம் நடந்த இடம் வீடா? மருத்துவமனையா? என்ற கேள்வியை உள்ளாட்சித் துறை கேட்கிறது. தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் வீட்டில் பிறந்துள்ளதற்கான ஆதாரங்களாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. "பிரசவம் நடைபெறும் இடம் மருத்துவமனையாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதா?'' என்ற கேள்விக்கு "கட்டாயம் இல்லை'' என்ற சட்டம் செல்கிறது.

அதே நேரத்தில் எந்த மருத்துவ அறிவும் இல்லாமல் வீட்டில் பிரசவம் பார்ப்பது உயிருடன் விளையாடுவதற்கு சமம். அதே போல, உயிரை காக்கும் விஷயம் என்பதையே காரணம் காட்டி, அதில் பணம் சம்பாதிப்பதற்காக சுகப்பிரசவத்தையும் சிசேரியனாக தனியார் மருத்துவமனைகள் மாற்றுவதும் தவறு. இந்த விஷயத்தில் தனியார் மருத்துவமனைகள் மனசாட்சியுடன் செயல்பட்டால் மட்டுமே சிசேரியன்கள் குறையும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

# விஜயுடன் ராகுல்காந்தி பேச்சு?

# கூட்டணி மாறுகிறதா காங்கிரஸ்?



**மதவாத சக்திகளை எதிர்க்க வேண்டும் என்றால் இண்டியா கூட்டணிக்கு தவெக கட்சி தலைவர் விஜய் வரவேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வபெருந்தகை திடீரென அழைப்பு விடுத்தது அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.**

திமுக கூட்டணியில் முறிவு ஏற்பட்டு 2012க்குப் பின் வெளியேறிய காங்கிரஸ் அதற்கு பின் 2016ல் மீண்டும் இணைந்தது. அதன் பின்னர் மக்கள் நலக்கூட்டணி கட்சிகளும் தோல்விக்குப்பின் 2018ல் திமுக கூட்டணியில் இணைந்தன. கூட்டணியில் இணைந்ததி லிருந்து 2024 மக்களவை தேர்தல்வரை மூன்று தேர்தல்களையும், உள்ளாட்சி தேர்தலையும் திமுக கூட்டணி சந்தித்து வெற்றி பெற்றுள்ளது.

இருப்பினும் கூட்டணி கட்சிகளை திமுக நடத்தும் விதம் அவ்வப்போது முணுமுணுப்பை ஏற்படுத்தினாலும், கூட்டணி உடையாமல் இருக்க சமரச நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டணி கட்சி தலைமை என்கிற வகையில் திமுகவின் ஆதிக்கம் அதிகரிப்பது, கூட்டணி கட்சிகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது, தேர்தலில் போட்டியிடும் சீட்டுகளை குறைத்து முடக்குவது என திமுகவின் செயல்கள் கூட்டணி கட்சிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்திய தாக கூறப்படுகிறது.

## கடும் கோபத்தில் திமுக..?



www.keelainews.in




**கூட்டணி கட்சிகளை திமுக நடத்தும் விதம் அவ்வப்போது முணுமுணுப்பை ஏற்படுத்தினாலும், கூட்டணி உடையாமல் இருக்க சமரச நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**



திமுக ஆட்சி நடந்தாலும் கூட்டணியில் உள்ள கட்சிகள் ஏதோ ஆட்சியில் பங்கு கொண்டதுபோல் ஆளுங்கட்சியின் தவறுகள், மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கெல்லாம் முட்டுக்கொடுத்து வந்தன. கூட்டணி கட்சிகளுக்குள் விசிக தொடங்கி மார்க்சிஸ்ட் கட்சி வரை திமுகவுடன் பல விஷயங்களில் முரண்பட்டன. ஆனாலும் கூட்டணிக்குள் வாய்ப்பேச முடியாமல் இருந்தன காரணம் மாற்று வழி இல்லாமல் இருந்ததுதான்.

இந்நிலையில் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே உள்ள நிலையில் அனைத்து அரசியல் சூழ்நிலைகளும் மாறி வருகிறன. தவெகவை விஜய் தொடங்கி கூட்டணி, ஆட்சியில் பங்கு என அறிவித்ததும், அதிமுக பாஜகவுடன் கூட்டணி இல்லை என அறிவித்ததும் திமுக தோழமை கட்சிகளுக்கு மாற்று வழிக்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



இத்தகைய சூழலில்தான் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை தவெகவை இண்டியா கூட்டணிக்கு வருமாறு அழைப்பு விடுத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். தமிழகத்தில் இண்டியா கூட்டணியில் பெரிய கட்சியாக தலைமை தாங்கும் இடத்தில் திமுக உள்ள நிலையில், திமுகவை கடுமையாக எதிர்க்கும் தவெகவை கூட்டணிக்குள் தன்னிச்சையாக அழைக்கும் தைரியம் செல்வப்பெருந்தகைக்கு எப்படி வந்தது என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

கூட்டணிக்குள் தவெகவை அழைத்தால் அதை திமுக தலைவர்கள் எப்படி எடுத்துக்கொள்வார்கள்? தவெக திமுகவை கடுமையாக விமர்சித்து வரும் நிலையில் புத்தக வெளியீட்டு விழாவிற்கு செல்ல திருமாவளவனுக்கு நெருக்கடி கொடுத்தவர்கள் இதை எப்படி வேடிக்கை பார்ப்பார்கள் என பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

செல்வப்பெருந்தகை மாநில தலைவராக இருந்தாலும், டெல்லி மேலிடத்திலிருந்து சிக்னல் கிடைக்காமல் அவர் பேச முடியாது. ஆகவே அவருக்கு கிரீன் சிக்னல் கிடைத்தே விஜய்யை கூட்டணிக்கு அழைத்திருப்பதாக கருதப்படுகிறது.

இதுகுறித்து தவெக தரப்பிலும், காங்கிரஸ் தரப்பிலும் விசாரித்தபோது சில சுவாரஸ்யமான தகவல்கள் கிடைத்தன. அண்மையில் டெல்லியிலிருக்கும் காங்கிரஸ் தலைமைக்கு நெருக்கமான நபர் ஒருவரை, விஜய்க்கு நெருக்கமான ஒரு நபர் டெல்லியில் சந்தித்துள்ளாராம். இந்த தகவலை புஸ்ஸி ஆனந்த், ஜான் ஆரோக்கியசாமிக்கு கூட தெரியாமல் ரகசியமாக வைத்துக்கொண்டாராம் விஜய்.

இந்த சந்திப்பின் மூலம் பல தகவல்கள் ராகுலுக்கு சொல்லப் பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ராகுலை விஜய் சந்தித்தபோது கட்சி தொடங்கினால் தாங்கள் விஜய்க்கு துணை நிற்போம் என்று ராகுல் கூறியது, தமிழகத்தில் ஒரு மாற்று அரசியல் வேண்டும் என ராகுல் விரும்புவது ஆகியவை குறித்தும் தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழல் குறித்தும் அப்போது பேசப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அப்போது அந்த நபரின் செல்போனிலிருந்து ஃபேஸ் டைம் மூலம் விஜய்யிடம் ராகுல் பேசியதாகவும் அப்போது மேலும் பல விஷயங்கள் விவாதிக்கப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இது உளவுத்துறை கூட ஸ்மெல் பண்ண முடியாத அளவுக்கு சீக்ரெட்டாக நடந்துள்ளது.

இதன் பின்னரே செல்வ பெருந்தகைக்கு இதுகுறித்து காங்கிரஸ் தலைமை மூலம் கிரீன் சிக்னல் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் அதன் அடிப்படையிலேயே செல்வபெருந்தகை துணிச்சலாக பேசியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. காங்கிரஸ் விஜய்க்கு கிரீன் சிக்னல் காட்டியுள்ள நிலையில் அடுத்தடுத்து வரும் மாற்றங்களை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் தவெக தலைவர் விஜய்க்கு அழைப்பு விடுத்துள்ள செய்தி திமுகவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. மாறி வரும் இந்த அரசியல் சூழ்நிலைகள் 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை மேலும் சுவாரஸ்யமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ராணுவ விமானம், கை விலங்கு

# உலக நாடுகளுக்கு ட்ரம்ப் உணர்த்துவது என்ன?

அமெரிக்காவில் இந்தியாவை சேர்ந்தவர்கள் மட்டும் அங்கு 18 ஆயிரம் பேர் சட்டவிரோதமாக குடியேறி உள்ளதாக கூறப்படுகின்றது. இதில், முதல்கட்டமாக சட்டவிரோதமாக குடியேறிய 104 இந்தியர்களை அமெரிக்காவின் ராணுவ விமானம் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் விமான நிலையத்தில் தரையிறக்கியது. இந்த விமானத்தில் பஞ்சாப், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களை சேர்ந்தவர்கள் வந்தனர். அவ்வாறு விமானத்தில் அழைத்து வரப்பட்டவர்களில் குழந்தைகள், பெண்களை தவிர மற்றவர்கள் கை, கால்களில் விலங்கிட்டு ஏதோ தேச துரோக குற்றம் புரிந்தவர்கள் போல அழைத்து வரப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்களின் கை மற்றும் கால்களில் விலங்கு போடப்பட்ட விவகாரம் சர்ச்சையான நிலையில், சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்த ராணுவ விமானத்தை ட்ரம்ப் அரசு ஏன் பயன்படுத்துகிறது? என்ற கேள்வி எழுந்துள்ளது. அதைப்பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

அமெரிக்காவின் 47ஆவது அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றதும் சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மெக்சிகோ எல்லையில் அவசரநிலையை பிரகடனப்படுத்தியதுடன் நாடு கடத்தும் பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளார். அதன்படி பிரேசில், கொலம்பியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோதக் குடியேறிகள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைக்கு சி 17 என்னும் ராணுவ விமானத்தை அமெரிக்கா பயன்படுத்துகிறது. பயணிகள் விமானத்தோடு ஒப்பிடுகையில் சி 17க்கு ஆகும் செலவு 5 மடங்கு அதிகம். அப்படியிருந்தும் அதை பயன்படுத்துவதன் மூலம் சில செய்திகளை இந்த உலகுக்கு உணர்த்த முயல்கிறார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

உரிய ஆணவங்களின்றி ஒரு நாட்டில் வசிப்பவர்களை சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என்றுதான் அழைப்பார்கள். ஆனால் ட்ரம்போ, 'ஏலியன்கள்', 'குற்றவாளிகள்', 'சட்டவிரோதமாக படையெடுத்தவர்கள்' என்றெல்லாம் கூறிவருகிறார். அவர்



www.keelainews.in

நினைத்தால் கொஞ்சம் கண்ணியத்துடன் சட்டவிரோதக் குடியேறிகளை வெளியேற்ற முடியும். எனினும் இதுபோன்ற செயல்களை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளமாட்டேன் என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்தவே கை மற்றும் கால்களில் விலங்குபோடுவது, ராணுவ விமானத்தை பயன்படுத்துவது போன்ற செயல்களை ட்ரம்ப் செய்வதாகக் கூறப்படுகிறது. மற்றொருபுறம் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றுவது தொடர்பாக அமெரிக்காவில் சில சட்டங்கள் இருப்பதாகவும் அதன்படியே அந்த நாடு நடப்பதாகவும் சொல்லப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று போற்றப்படும் இந்தியாவிற்கு ஏற்பட்ட பெரும் அவமானமாக இது பார்க்கப்படுகின்றது. இந்தியர்கள் கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரத்தை எதிர்கட்சிகள் மிகக் கடுமையாக விமர்சித்ததோடு மட்டுமல்லாது இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பினர். மேலும் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். அமெரிக்காவின் அடாவடியை கண்டிக்க வேண்டிய ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சரான ஜெய்சங்கர், நாடு கடத்தும் செயல்முறை புதிதல்ல, பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்றது என்றும், நாடு கடத்தப்படுபவர்கள் விமானத்தில் வரும் போது கைவிலங்கிட்டு அழைத்து வருவது வழக்கமான நடைமுறைதான் என்றும், ஆனாலும் இது தொடர்பாக அமெரிக்க அரசுடன் பேசப்படும் என்றார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும் நடைமுறையில் எந்த ஒரு வாய்ப்பும் கொடுக்காமல் வலுக்கட்டாயமாக அவர்களை ராணுவ விமானத்தில் அனுப்பி இந்திய வான்வழியில் நுழைந்து தரையிறக்கியதன் மூலம் உலக நாடுகளிடம் இந்தியாவிற்கு இருந்த மொத்த இமேஜையும் அமெரிக்க அதிபர் டிரம்ப் நொறுக்கி இருக்கிறார். இந்தியாவை விட சிறிய நாடான கொலம்பியாவிடம் இதே போன்ற நடைமுறையை கையாள முயன்ற போது, அந்நாடு பயணிகள் விமானத்தை அனுப்பி நாங்களே எங்கள் நாட்டினரை அழைத்து கொள்கிறோம். மீறி முற்பட்டால் எங்கள் வான்வெளியில் ராணுவ விமானத்தை நுழையவும், தரையிறங்கவும் அனுமதிக்க மாட்டோம் என்று கூறவே கொலம்பியாவின் சீற்றத்திற்கு வேறு வழியின்றி உலக நாட்டாமையான அமெரிக்கா பணிந்தது.



**மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்ட அமெரிக்காவின் நடவடிக்கையை கண்டிக்காமல் கைவிலங்கிட்டு அழைத்து வருவது வழக்கமான நடைமுறை என்று பதிலளித்திருப்பதன் மூலம் இந்தியா உலகின் விஸ்வகுருவாக மாறிவருகின்றது**

கொலம்பியா நாட்டின் மக்கள் தொகை 5.2 கோடி மட்டுமே. உலக அளவில் பொருளாதாரத்தில் 39வது இடத்தில் உள்ளது. பரப்பளவிலும், ராணுவ பலத்திலும், பொருளாதாரத்திலும் இந்தியாவோடு ஒப்பிடுகையில் ஒன்றுமே இல்லாத கொலம்பியா காட்டிய குறைந்தபட்ச எதிர்ப்பை கூட காட்டாமல் ஒன்றிய அரசு கோழைத்தனமாக நடந்து இந்தியாவின் மொத்த கவுரவத்தையும் சீர்குலைத்து விட்டதாக எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இந்தியாவில் இருந்து பயணிகள் விமானத்தை அமெரிக்காவுக்கு அனுப்பி தங்கள் குடிமக்களை மரியாதையுடன் தங்கள் நாட்டுக்கு அழைத்து வந்திருக்க வேண்டிய ஒன்றிய அரசானது, மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்ட அமெரிக்காவின் நடவடிக்கையை கண்டிக்காமல் கைவிலங்கிட்டு அழைத்து வருவது வழக்கமான நடைமுறை என்று பதிலளித்திருப்பதன் மூலம் இந்தியா உலகின் விஸ்வகுருவாக மாறிவருகின்றது என்று கூறியது எல்லாம் வெறும் வாய் ஜாலமே.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு மெக்சிகோ, கொலம்பியா, பிரேசில் உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. குறிப்பாக அமெரிக்காவின் ராணுவ விமானம் தரையிறங்க மெக்சிகோ அனுமதி மறுத்தது. அதன் காரணமாகவே அந்நாட்டுக்கு 25 விழுக்காடு வரி விதித்தார் ட்ரம்ப். இதன்மூலம் யார் எதிர்ப்பு தெரிவித்தாலும் தமது நடவடிக்கைகள் தொடரும் என்பதை சொல்லாமல் சொல்லியிருக்கிறார் அமெரிக்க அதிபர். இந்த விவகாரம் நம் நாட்டு நாடாளுமன்றத்தில் புயலைக் கிளப்பியதும் இங்கே குறிப்பிடவேண்டிய மற்றொரு செய்தி.

# ஈரோடு வெற்றி

# நல்லாட்சிக்கு சாட்சியம்!

**பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை தமிழ்நாட்டுக்கு தந்த பெருமைக்குரிய நகரம் ஈரோடு. இங்குள்ள கிழக்கு தொகுதியின் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரான ஈவிகேஎஸ் இளங்கோவன், கடந்தாண்டு டிசம்பர் 14ம்தேதி இயற்கை எய்தினார். இதையடுத்து இடைத்தேர்தல் நடத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டது இந்திய தேர்தல் ஆணையம். இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார் அறிவிக்கப்பட்டார். பிரதான எதிர்க்கட்சியான அதிமுக இத்தேர்தலை புறக்கணித்தது.**

நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி நிறுத்தப்பட்டார். இவர்கள் மட்டுமன்றி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 13வேட்பாளர்கள், சுயேட்சைகள் 31பேர் என்று மொத்தம் 46வேட்பாளர்கள் களத்தில் நின்றனர். பரபரப்பான அரசியல் சூழல்களுக்கு இடையே இம்மாதம் 5ம்தேதி தேர்தல் நடந்தது. இதில் ஆண்கள், பெண்கள், இதரர் என்று 70சதவீதம் பேர், தங்களது வாக்குகளை செலுத்தி ஜனநாயக கடமையாற்றினர். பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியது.







முதல் சுற்றில் இருந்தே திமுக வேட்பாளர் முன்னிலை வகித்தார். இறுதி சுற்றுநிலவரப்படி 90,629 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடினார். அவருக்கு அடுத்து 23,810வாக்குகள் பெற்ற நாம்தமிழர் கட்சி வேட்பாளர் டெபாசிட் இழந்துள்ளார். பெரியார் மண்ணில் திராவிட மாடல் ஆட்சிக்கு ஆர்ப்பரிக்கும் அமோக ஆதரவை அள்ளித்தந்துள்ளனர் மக்கள் என்பதை இந்த தேர்தல் முடிவுகள், மீண்டும் பறைசாற்றியுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு நடந்த தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட திருமகன் ஈவெராவுக்கு 62,495வாக்குகள் கிடைத்தது.

அவரை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் யுவராஜா 56,004வாக்குகள் பெற்றார். திருமகன் ஈவெராவின் வெற்றி என்பது 6,491வாக்குகள் வித்தியாசத்தில் நிர்ணயிக்கப்பட்டது. அவரது மறைவுக்கு பிறகு மீண்டும் நடந்த இடைத்தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக ஈவிகேஎஸ் இளங்கோவன் போட்டியிட்டு 1,10,156வாக்குகள் பெற்றார். அதிமுக வேட்பாளராக போட்டியிட்ட தென்னரசுக்கு 43,923வாக்குகள் கிடைத்தது. 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் ஈவிகேஎஸ் இளங்கோவன் வெற்றிபெற்றார்.

இந்தநிலையில் ஈவிகேஎஸ் இளங்கோவன் திடீர் மறைவுக்கு பிறகு தற்போது மீண்டும் ஒரு இடைத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இதில் திமுக வேட்பாளராக போட்டியிட்ட வி.சி.சந்திர குமாருக்கு 1,14,439வாக்குகள் கிடைத்துள்ளது. நாம்தமிழர் கட்சிக்கு 23,810வாக்குகள் கிடைத்துள்ளது. 75சதவீத வாக்காளர்களின் ஆதரவை பெற்று 90,629வாக்குகள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளார் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளர் சந்திர குமார்.

அதாவது 2021சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் போட்டியிட்ட போது வெற்றியை தக்கவைத்த வாக்குகளின் எண்ணிக்கை 6,491. இரண்டு ஆண்டுகள் ஆட்சி கடந்த நிலையில் இடைத்தேர்தல் நடந்தது. இதில் வெற்றிக்கான வாக்கு வித்தியாசம் 66,233. இதுவே மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம்.

இப்படிப்பட்ட நிலையில் தற்போது நடந்த இடைத்தேர்தலில் திமுக வேட்பாளரின் வெற்றியை நிர்ணயித்துள்ள வாக்கு வித்தியாசம் 90,629. இது இமாலய சாதனை வெற்றி என்று சொல்வதை விட, நல்லாட்சிக்கு பெரும் சாட்சியமான இதயங்களின் வெற்றி என்பதே பொருத்தமானது. போட்டியிடவில்லை என்று சிலர் வாக்குகளை மடைமாற்றம் செய்தாலும், மக்களின் மனதை யாரும் இடமாற்றம் செய்யமுடியாது என்பதையும் அம்பலமாக்கியுள்ளது இந்த இடைத்தேர்தல்.

Owned and Published by **K.M. ABDULLAH** from 20/491, North Street, Kilakkarai - 623 517
Editor: **ABDULLA SYED ABDEEN**. All legal proceedings arising out of this issue will come under **RAMANATHAPURAM** court jurisdiction only.

AL-AFIA HALAL SHOPPEE

SINCE 2018
AL-AFIA TOURS & TRAVELS

DG
DOWNSHORE GARMENTS

## SERVICES

+91 8428412037

- Haj & Umrah
- Flight Ticket
- Tour packages
- Passport
- Visa service

+91 8428412038

AL-AFIA HALAL SHOPPEE

SINCE 2018
AL-AFIA TOURS & TRAVELS

DG
DOWNSHORE GARMENTS

## PRODUCTS

- Attar
- Perfumes
- Watches
- Islamic Books

## PRODUCTS

- Imported Lungies
- Men's Wear
- Lungies
- Inners

+91 8428412124

Crown palace,VS salai,
Kilakarai

alafiahalalshoppe

alafiatoursandtravels

Downshoregarments

Registered with Registrar of Newspaper of India No.TNTAM/2005/17836

# INTELLIGENCE INFOTECH



- Web Designing
- App Development
- Digital Marketing
- Graphics Designing
- Video Editing
- Billing Software
- Digital Printing



For more info:
intelligenceinfotech.com

118-A5, Mattappa Street, Tenkasi - 627811

admin@iitmail.com | 8148518399

Regd No. TNTAM/2005/17836